தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கால்நடை பராமரிப்பு விவரங்களை அறிய தொடு திரை கணினி

**திண்டுக்கல்,**

கால்நடை பராமரிப்பு தொடர்பான தகவல்களை விவசாயிகள் எளிதாக தெரிந்துகொள்ளும் வகையில், கால்நடை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில்(திண்டுக்கல்) தொடு திரை கணினி அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகத்தின் சார்பில் 20 மாவட்டங்களில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தின் மூலம் விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் நோய் தடுப்பு முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் விவசாயிகளுக்கு தேவையான தகவல் அளிக்க பயிற்சி மையங்களில் தொடு திரை இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. பண்ணை தொடர்பான செய்திகள், கறவை மாடு வளர்ப்பு, காடை வளர்ப்பு, வெண் பன்றி வளர்ப்பு, முட்டை கோழி மற்றும் இறைச்சி கோழி வளர்ப்பு உள்ளிட்ட தகவல்களை, தொடு திரை கணினி மூலம் அறியலாம்.

மேலும் நோய் தடுப்பு முறைகள், கால்நடை இனங்கள், தீவனப் பொருள்கள், கோழிக்குஞ்சு கிடைக்கும் இடங்கள், சந்தைப்படுத்துதல், அரசின் நலத் திட்டங்கள் குறித்தும் தகவல் பெறலாம்.

திரையை தொட்டால், ஒலி ஒளி காட்சிகள் மூலம் விவசாயிகளுக்கு தேவையான விளக்கம் எளிதாக கிடைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ரூ.93ஆயிரம் செலவில் அமைக்கப்பட்டுள்ள இதைப் பயன்படுத்தி விவசாயிகள் பயனடையுமாறும், காலை 10 முதல் மாலை 5.45 மணி வரை மையம் செயல்படும்

என்றும் கால்நடை பல்கலை. ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் இணைப் பேராசிரியர் எஸ்.பீர்முகமது தெரிவித்தார்.

**வறட்சி மாவட்டமாக அறிவிக்கக் கோரிக்கை**

**ஒட்டன்சத்திரம்,**

திண்டுக்கல் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று அர.சக்கரபாணி எம்.எல்.ஏ பேசினார்.

ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஒன்றிய, நகர திமுக மாணவர் அணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்றது. ஒட்டன்சத்திரம் ஒன்றிய திமுக செயலர் இரா.சோதீஸ்வரன் தலைமை வகித்தார். தொப்பம்பட்டி ஒன்றியச் செயலர் சி.ராஜாமணி, தொப்பம்பட்டி ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் கே.பொன்ராஜ், ஒட்டன்சத்திரம் நகர மாணவர் அணி அமைப்பாளர் சி.அருண்குமார், கீரனூர் பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர் டி.ஜெயப்பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் எஸ்.டி.எம்.சிவக்குமார் வரவேற்றார்.

கூட்டத்தில் முன்னாள் மத்திய இணை அமைச்சர் எஸ்.ரகுபதி, தலைமைக் கழக பேச்சாளர் அந்தியூர் சுப்பு ஆகியோர் மொழிப்போர் தியாகிகளைப் பற்றி பேசினர். கூட்டத்தில் ஒட்டன்சத்திரம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் அர.சக்கரபாணி பேசியதாவது: திண்டுக்கல் மாவட்டத்தில் பருவமழை குறைந்த அளவே பெய்து உள்ளது. இதனால் கடுமையான வறட்சி நிலவுகிறது. விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்கவில்லை.

எனவே கால்நடைகளுக்கு தமிழக அரசு இலவசமாக தீவனம் வழங்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு குடும்ப அட்டையை வைத்து வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று பேசினார். பொதுக்குழு உறுப்பினர்கள் வெள்ளைச்சாமி,

மோகன், கருப்புச்சாமி, கீரனூர் பேரூர்  செயலர் அன்பு என்ற காதர்பாட்சா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் புலியூர்நத்தம் ஊராட்சியை சேர்ந்த 25 அதிமுகவினர் அக்கட்சியிலிருந்து விலகி திமுகவில் இணைந்தனர்.

முடிவில் ஒட்டன்சத்திரம் ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் கே.வி.முருகானந்தம் நன்றி கூறினார்.

**மிளகாய் பயிரில் பூக்கள் உதிர்வதைத் தடுக்க பிளானோபிக்ஸ்**

**பரமக்குடி,**

ராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் ஒன்றியத்தில் பயிரிடப்பட்டுள்ள மிளகாய் சாகுபடியில் பூக்கும் பருவத்தில் பூ மொட்டுகளும், பூக்களும் உதிர்வதை தடுக்க பிளானோபிக்ஸ் எனப்படும் பயிர் வளர்ச்சி ஊக்கி மருந்தை பயன்படுத்த வேண்டும் என தோட்டக் கலை உதவி இயக்குநர் எஸ். ஆறுமுகம் புதன்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியது: நயினார்கோவில் ஒன்றியத்தில் இந்த ஆண்டு 1,550 ஹெக்டர் பரப்பளவில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது மிளகாய் பயிர் பூக்கும் பருவத்தில் உள்ளது.

இந்த சமயத்தில் பூ மொட்டுகளும், பூக்களும் சில இடங்களில் பிஞ்சுகளும் உதிர்வதால் மகசூல் இழப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதனைத் தவிர்க்க பயிர் முளைத்த 90 மற்றும் 120-ஆம் நாள்களில் பிளானோபிக்ஸ் எனப்படும் பயிர் வளர்ச்சி ஊக்கி மருந்தை 4.5 லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி வீதம் கலந்து கைத் தெளிப்பான் மூலம் மாலை வேலையில் தெளிக்க வேண்டும். பயிர் வளர்ச்சி ஊக்கி மருந்துடன் கலக்கும் நீர் உப்பு நீராக இருத்தல் கூடாது.

இந்த மருந்தை தெளிக்கும்போது நிலம் போதுமான ஈரப்பதத்துடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு பயிர் வளர்ச்சி ஊக்கி தெளிப்பதன் மூலம் பூ, பிஞ்சு உதிர்வதைக் கட்டுப்படுத்துவதோடு, அதிக அளவு பூக்கள் உருவாக வழி ஏற்படும். மிளகாய் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்கள் பயிருக்கு பிளானோபிக்ஸ் தெளித்து அதிக மகசூல் பெற வேண்டும் என அவர் தெரிவித்தார்.

**கோபியில் பனிப்பொழிவு: கொப்பரை விலை உயர்வு**

**கோபி,**

கோபி பகுதியில் கடுமையான மூடுபனி காரணமாக கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வரத்து குறைந்ததைத் தொடர்ந்து, கொப்பரை விலை உயர்ந்துள்ளது.

கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை கொப்பரை  ஏல விற்பனை நடைபெற்று வருகிறது. வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில், கோபி, கள்ளிப்பட்டி, சிறுவலூர், கொளப்பலூர், காசிபாளையம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து 42 விவசாயிகள் 229 மூட்டைகளில் கொப்பரைகளைக் கொண்டு வந்தனர்.

இதில் கொப்பரை குவின்டால் ஒன்றுக்கு, குறைந்தபட்ச விலையாக ரூ. 7,683-க்கும், அதிகபட்ச விலையாக ரூ. 8,193-க்கும் விலை போனது. சராசரி விலையாக ஒரு குவின்டால் விலை ரூ. 7,943-க்கு விற்பனை ஆனது.  மொத்தம் ரூ. 10 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனையானது. இந்த கொப்பரைகளை திருப்பூர், பெருந்துறை, ஊத்துக்குளி, காங்கயம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் வாங்கி சென்றனர்.

கோபி சுற்று வட்டாரத்தில், கடந்த சில நாட்களாக பகல்நேரத்திலும் பனிப்பொழிவு காணப்படுகிறது. அதனால் கொப்பரையை சரியாக உலரவைக்க முடியவில்லை. உற்பத்திக் குறைவு காரணமாக, கொப்பரை விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், கடந்த வாரம் ஒரு கிலோ ரூ. 78.93-க்கு கொப்பரை விற்கப்பட்டது. நடப்பு வாரத்தில் கிலோவுக்கு ரூ. 3 வரை உயர்ந்து ஒரு கிலோ ரூ. 81.93-க்கு விற்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**பவானிசாகர் நீர்மட்டம்**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 42.25 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 584 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 700 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.83 டி.எம்.சி.

**தனியார் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்துக்கு வங்கிகள் கடன் வழங்கினால் நடவடிக்கை**

**திருச்சி,**

தனியார்  பால் உற்பத்தியாளர்கள் சங்கத்துக்கு வங்கிகள் கடன் வழங்கினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் ஜெயசிறி முரளிதரன்.

திருச்சியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்துக்கு விவசாயிகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது இதை குறிப்பிட்டார். மேலும் அவர் பேசியது:

ஆவின் நிறுவனத்துக்கு பால் வழங்கும் சங்கங்களை மட்டுமே ஊக்குவிக்க வேண்டும். அதே நேரத்தில் தனியாருக்கு பால் வழங்குபவர்களை ஊக்குவிக்கக்கூடாது.  சங்க நடவடிக்கைகளில் முறைகேடாக ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

முன்னதாக தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்கத்தின் இணைச் செயலர் ந.கணேசன் பேசியது:

அரசு அறிவித்த பால் கொள்முதல்விலை போதுமானதாக இல்லை. தனியார் நிறுவனங்களின் கொள்முதல் விலையை அதிகம் வழங்கி வருகின்றனர். தொடர்ந்து பால் உற்பத்தி சங்கங்களை நடத்த முடியாத நிலை உள்ளது.

தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஆனால் கொள்முதல் விலை மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே பசும்பால், எருமைப்பால் விலையை கூடுதலாக உயர்த்தித் தர வேண்டும் என்றார்.

தீவிரமாக கடன்: திருச்சி மாவட்டத்தில் நிகழாண்டில்ரூ.190 கோடி விவசாயக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ.156.2 கோடி கடன் வழங்கப்பட்டிருக்கிறது. 33,700 க்கும் மேற்பட்ட விவசாயிகள் இதன் மூலம் பயன் பெற்றுள்ளனர் என்றார் மண்டலக் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ராஜேந்திர

பிரசாத்.

விவசாயிகளின் வங்கிக் கணக்கில் காப்பீட்டுத்தொகை: சம்பா பருவத்துக்கான பயி0ர்க் காப்பீட்டுத் தொகை தற்போது வந்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் ரூ.15.84 கோடி தொகை வந்துள்ள நிலையில் அவை சம்பந்தப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கில்

வரவு வைக்கப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணத்துக்காக பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு அரசு வழங்கியமுன் தொகை போக இந்த தொகை விவசாயிகள் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின்செயலாண்மை இயக்குநர் மிருளாளினி.

திருச்சி மாவட்டத்தில்தண்டலைப்புத்தூர், மண்ணச்சநல்லூர், வையம்பட்டி, மணிகண்டம் ஆகிய இடங்களில் பிப்ரவரி 15முதல் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் வைக்கோல் விற்பனை செய்யப்படும் என்றார் அத்துறையின் துணை இயக்குநர் மோகனரங்கன்.

மாவட்டத்தில் 1,13,853 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு இதுவரை 31,125ஏக்கரில் நெல் அறுவடை முடிவடைந்துள்ளது. சராசரியாக ஏக்கருக்கு 3580 கிலோ மகசூல் கிடைத்துள்ளது என்றார் வேளாண் இணை இயக்குநர் குருராஜ்சிங்.

கூட்டத்தில் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) ஆர். பாண்டியராஜன் உள்ளிட்ட பல்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## கரும்புக்குரிய தொகையை ஆலை நிர்வாகங்கள் தாமதமின்றி வழங்க வேண்டும்: விவசாயிகள்

**திருச்சி,**

அரசு அறிவித்தவாறு கரும்பு டன்னுக்கு ரூ.2650 என்ற விலையை விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலை நிர்வாகங்கள் தாமதமின்றி உடனடியாக வழங்க வேண்டும் என வலியுறுத்தினர் கரும்பு விவசாயிகள்.

திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற முத்தரப்புக் கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் தங்களது கருத்துகளை தெரிவித்து பேசியது:

கரும்பு ஏக்கருக்கு ரூ.60,000 வரை செலவு செய்து 30 டன் வெட்டும்பட்சத்தில் ரூ.10,000 முதல் ரூ.15000 வரைதான் கிடைக்கிறது. ஏக்கருக்கு 20 டன் என்று வெட்டும் போது விவசாயிக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

சர்க்கரை ஆலைகளுக்கு வழங்கப்படும் கரும்புக்குரிய தொகையை வழங்காமல் ஆலை நிர்வாகங்கள் காலதாமதம் செய்கின்றன. கரும்பு வெட்ட வரும் தொழிலாளர்களை ஏற்றி வரும் டிராக்டர், லாரிகளுக்கு ஆலை நிர்வாகம் தரும் கூலியை விட கூடுதலாக ரூ.600 முதல் ரூ.1000 வரை தர வேண்டிய நிலை உள்ளது.

உரிய நேரத்தில் கரும்பு வெட்டப்படாததால் விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஆலை நிர்வாகங்கள்தர வேண்டும். கரும்பு டன் ஒன்றுக்கு அரைகிலோ சர்க்கரை இலவசமாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது அதுவும் வழங்கப்படுவதில்லை என்றனர்.

கோரிக்கைகளைக் கேட்டறிந்த மாவட்ட ஆட்சியர் ஜெயசிறி முரளிதரன், ஆலை நிர்வாகங்கள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய தொகையை காலதாமதம் இல்லாமல் வழங்க வேண்டும் என்றார்.

கூட்டத்தில், தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பூ. விசுவநாதன், பாரதிய கிசான் சங்க மாநிலத் தலைவர் பூ. விசுவநாதன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாசிலாமணி மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## மழை இல்லாதபோது சொட்டு நீர் பாசன முறை கைகொடுக்கும்

**மன்னார்குடி,**

மழை இல்லாதபோது, விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் கைகொடுக்கும் என்றார் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

மன்னார்குடியை அடுத்துள்ள சேரி ஊராட்சிக்கு உள்பட்ட மேலகண்டமங்கலத்தில் வெள்ளிக்கிழமை முன்னோடி விவசாயி மன்னார்குடி எஸ். ரெங்கநாதனுக்குச் சொந்தமான பண்ணையில் டெல்டா மாவட்டத்தில் முதல்முறையாக சொட்டு நீர் பாசனத்தில் நெல் பயிரிடப்பட்டு அதை அறுவடை செய்யும் பணியை தொடங்கிவைத்து, மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் பேசியது:

திருவாரூர் மாவட்டம் இயற்கை செல்வம் நிறைந்த மாவட்டமாக உள்ளது. இங்குதான் முள்ளியாறு தலைப்பில் தொடங்கி அரசலாறு வரை பல ஆறுகள் ஓடுகின்றன. இந்த ஆறுகளில் நீர் செரிவூட்டல் திட்டம், நூறுக்கும் மேற்பட்ட குளங்களில் மழை நீரை சேமிக்க ஆழ்துளை கிணறு அமைத்தல் போன்ற பணிகளால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதால், நிகழாண்டில் குறைந்த அளவே மழை பெய்தும் விவசாயம் பொய்த்து போகவில்லை. ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் டெல்டா மாவட்டங்களில் நெல் வயலில் சொட்டு நீர் பாசனம் முறை செய்வது சாத்தியப்படுமா என ஆராய்ச்சி நடைபெற்ற நிலையிலும், 0.43 ஏக்கரில் பிபிடி 5204 என்ற ரக நெல்லை பயிரிட்டு இன்று அறுவடைக்கு கொண்டு வந்து அந்த திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியவர் ரெங்கநாதன்.

மழைக் காலங்களில் மழை நீரை கொண்டு விவசாயப் பணிகளை மேற்கொள்ளலாம். மற்ற காலங்களில் சொட்டு நீர் பாசன முறையை பின்பற்றலாம். இதன்மூலம் இரண்டு முறை நெல்லும் ஒரு முறை பயறு வகையோ அல்லது காய்கறிகளோ பயிரிடலாம். இந்த வகையில் விவசாயம் செய்வது சிறு, குறு விவசாயத்திற்கு ஏற்றது என்றார் ஆட்சியர்.

நிகழ்ச்சியில் மாவட்ட வேளாண் துணை இயக்குநர் கே. மயில்வாணன், வேளாண் ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் காமராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**போதிய அளவு அறுவடை இயந்திரங்களை வழங்க விவசாயிகள் வலியுறுத்தல் நாகப்பட்டினம்,**

நாகை மாவட்டத்தில் நெல் அறுவடை இயந்திரங்களை போதிய எண்ணிக்கையில் வழங்க வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் பேசிய விவசாயிகள், அரசு தரப்பில் நெல் அறுவடை இயந்திரங்களை போதிய அளவில் வழங்கவும், நடவு பணியின்போது நடவு இயந்திரங்களை வழங்க வேண்டும் என வலியுறுத்தினர்.

கூட்டத்துக்கு தலைமை வகித்த மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி பேசியது:

நடப்பு சம்பா பருவத்தில் நெல் அறுவடை பணிகள் நடைபெற்று வருகின்றன. தேவையான எண்ணிக்கையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்கும் விவசாயின் பெயரில் உள்ள வங்கி கணக்கு மூலம் பணத்தை வழங்க அரசு முன்வந்துள்ளது. அரசின் திட்டங்களை விவசாயிகள் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர். பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்களின் செயல்பாடு குறித்து விவசாயிகள் அதிருப்தி

**திருவாரூர்,**

திருவாரூர் மாவட்டத்தில் நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கூறினர்.

ஆட்சியரகத்தில் வியாழக்கிழமை ஆட்சியர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

மருதப்பன்: நீடாமங்கலம் பகுதியிலுள்ள கால்நடை மருத்துவமனையில் கால்நடைகளுக்கு சினை ஊசி போட கிட்டி (பாதுகாப்பு வசதி) அமைத்துக் கொடுக்க வேண்டும்.

சங்கர்: குறைந்தளவு தண்ணீர்த் தேவையுள்ள சோளம், பருத்தி ஆகியப் பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்ய ஊக்கப்படுத்த வேண்டும்.

ஜி. சுந்தரமூர்த்தி: திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகளிடம் 300 மூட்டை நெல் இருந்தால், அவை நடமாடும் நெல் கொள்முதல் நிலையம் மூலம் கொள்முதல் செய்யப்படும் என்று அமைச்சர் காமராஜ் கூறியுள்ளார். ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை.

வலங்கைமான் பகுதியில் 600 மூட்டை நெல்லை கொள்முதல் நிலையத்துக்கு கொண்டு செல்ல முடியாமல் அவதிப்படும் நிலை உள்ளது. வலங்கைமானில் விவசாயிகளுக்கான பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகை வழங்குவதை ஆட்சியர் நிறுத்திவைத்துள்ளதாக அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜெயராமன் : நெல் கொள்முதல் நிலையங்களில் கருக்காய் நெல்லை விவசாயிகளிடமே கொடுக்க வேண்டும்.

பாலகுமாரன்: பேரளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கம் மூலம் நேரடி விதைப்புக் கருவி, கதிரடிக்கும் இயந்திரம் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பாண்டியன்: மேட்டூர் அணையிலிருந்து சென்னைக்கு நேரடியாக தண்ணீர் எடுத்துச்செல்ல சென்னை பெருநகர குடிநீர்வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ள நடவடிக்கையை தமிழக அரசு உடனடியாக தடுக்க வேண்டும்.

சா.வீ. ராமகிருஷ்ணன்: சுரக்குடி, மூங்கில்குடியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

ஆட்சியர் சி. நடராசன் பேசியது: விவசாயிகளுக்கான காப்பீடுத் தொகை வழங்க எவ்வித தடையும் விதிக்கவில்லை. மாவட்டத்தில் 7 நடமாடும் நெல்கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகின்றன என்று ஆட்சியர் கூறினார்.

கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் கே.சி. ரவிச்சந்திரன்: தேசிய வேளாண் காப்பீடுக் கழகம், விவசாயிகளுக்கு ரூ. 232 கோடி பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

137 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் ரூ. 178 கோடி வழங்கப்படும் என்றார்.

### கோமாரி நோயினால் கால்நடைகள் இறப்பு: நிவாரணம் வழங்கக் கோரிக்கை கடலூர்,

கோமாரி நோய் பாதிக்கப்பட்டு இறந்த கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடலூர் மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்துக்கு மாவட்டத் தலைவர் மாதவன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் ரவிச்சந்திரன், பொருளாளர் தட்சிணாமூர்த்தி, மாநிலக் குழு உறுப்பினர் காமராஜ், நிர்வாகிகள் கண்ணன், தனபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இக் கூட்டத்தில் கடலூர் மாவட்டத்தில் தனியார் பேருந்துகளில் பஸ் கட்டணம் ஒரு ரூபாய் உயர்த்தி வசூலித்து வருகின்றனர். இது கண்டிக்கத்தக்கது. ஆதார் அட்டை பெறுவதற்கு அலைய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் ஆதார் அட்டை பெற புகைப்படம் எடுப்பதற்கு சிறப்பு முகாம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். கோமாரி நோயால் இறந்து

போன ஆடு, மாடுகளை முறையாகக் கணக்கெடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நெல் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்**

**காரைக்கால்,**

காரைக்காலில் நெல் கொள்முதல் செய்ய புதுவை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாமக மாநிலச் செயலர் ஆர்.கே.ஆர். அனந்தராமன் வலியுறுத்தியுள்ளார்.

காரைக்கால் மாவட்ட பாமக சார்பில் பொதுக்கூட்டம் திருநள்ளாறில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட அவர் பேசியது:

காரைக்காலுக்குரிய காவிரி நீரை நிகழாண்டு புதுவை அரசு முறையாக பெற்றுத் தர வேண்டும். கடந்த ஆண்டு விவசாயிகள் பல்வேறு கஷ்டங்களுக்கு இடையே விளைவித்த நெல்லை தற்போது, கொள்முதல் செய்ய வாய்ப்பில்லாததால் விவசாயிகள் நஷ்டத்தில் விற்கின்றனர். இந்த நிலையை போக்க, அரசு சார்பில் கொள்முதல் நிலையங்களை புதுச்சேரி அரசு உடனடியாக திறக்க வேண்டும்.

திருநள்ளாறு கோவில் நகரத் திட்டத்தை ரத்து செய்துவிட்டு புதிதாக வரைவு திட்டத்தை அமல்படுத்த வேண்டும். திருநள்ளாறு பகுதியில் உள்ள தொழில்சாலையில் பணியமர்த்தப்பட்டுள்ள கொத்தடிமைகளை வெளியேற்றிவிட்டு, காரைக்கால், திருநள்ளாறு பகுதி இளைஞர்களுக்கு வேலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாமகவுக்கு மத்தியிலும், மாநிலத்திலும் அதிகாரம் கிடைக்கும்போது, புதுவை மாநிலத்தில் வேலைவாய்ப்புகளை பெருக்கும் நடவடிக்கையில் தீவிரமாக கவனம் செலுத்துவோம் என்றார்.

காரைக்காலில் நிலவும் பிரச்னைகள் குறித்து மாநில துணைத் தலைவர் கோ. கணேசன், காரைக்கால் மாவட்ட செயலர் க. தேவமணி, மாவட்ட தலைவர் இரா. துரை உள்ளிட்டோர் பேசினர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மாதம் ரூ.1.5 கோடி சம்பாதிக்கும் கிராமம்**

**ராய்ப்பூர்**: சத்தீஸ்கரில், ஒரு கிராமத்தை சேர்ந்தவர்கள், பசு மாடுகள் வளர்த்து, பால் பண்ணை தொழிலின் மூலம், ஆண்டுக்கு, 1.5 கோடி ரூபாய் சம்பாதிக்கின்றனர்.

பா.ஜ.,வைச் சேர்ந்த, முதல்வர், ரமண் சிங் தலைமையிலான சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ளது, கோத்ரபாதா கிராமம். எட்டாண்டுகளுக்கு முன், இக்கிராம மக்களின் விவசாய நிலங்கள், ஏதோ ஒரு காரணத்தால், மாநில அரசால் கையகப்படுத்தப்பட்டது.இதனால், வேலைஇழந்த அக்கிராமத்தினருக்கு, இழப்பீடு வழங்கப்பட்டது. அந்தத் தொகையை வைத்து, கறவை மாடுகள் வாங்கிய கிராம மக்கள், பால் உற்பத்தியில் அபரிமிதமான வளர்ச்சி அடைந்துள்ளனர்.

அந்த கிராமத்தில், 200 வீடுகள் உள்ளன. ஒவ்வொரு வீட்டிலும், 75 - 100 பசு மாடுகள் இருக்கின்றன. தினமும், 12 ஆயிரம் லிட்டர் பால் இங்கு உற்பத்தியாகிறது. இதன் மூலம், மாதத்திற்கு, 1.5 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது.மாதந்தோறும், ஒவ்வொரு வீட்டிற்கும், தலா, ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வருவதால், இந்த கிராமம், செல்வச் செழிப்பில் உள்ளது. இங்கு கிடைக்கும் பாலை, 'அமுல்' போன்ற முன்னணி நிறுவனங்கள், முன்பணம் செலுத்தி வாங்கிச் செல்கின்றன.

**நாக்பூரில் 9ல் துவங்குது விவசாயிகள் கண்காட்சி**

**நாக்பூர்:** மகாராஷ்டிராவின் நாக்பூர் நகரில், "கிரிஷி வசந்த் - 2014' என்ற பெயரில், விவசாய கண்காட்சி, ஐந்து நாட்கள் நடைபெறுகிறது. இம்மாதம், 9ம் தேதி துவங்கும் இந்த கண்காட்சி, 13ம் தேதி வரை நடக்கிறது. இதில், நாடு முழுவதும் விளைவிக்கப்படும் விவசாய பொருட்கள், புதிய முறை விவசாயம் தொடர்பான கண்காட்சி, செயல் விளக்கம் இடம்பெறும். இதில், 1,000 ஸ்டால்களில், நாட்டில் விளையும் பயிர்கள் குறித்த, விவசாய செயல் விளக்கம் இடம் பெறும். விவசாயிகளுக்கும், விவசாயத் துறையினருக்கும் மிகவும் பயனளிக்கும் இந்த கண்காட்சியை, மத்திய விவசாயத் துறையும், மகாராஷ்டிரா மாநில அரசும் இணைந்து நடத்துகின்றன.

ஐந்து லட்சம் விவசாயிகள், இந்த கண்காட்சியை பார்வையிடுவர் எனவும், 50 லட்சம் விவசாயிகளுக்கு, இணையதளம் மூலம் பார்வையிட வசதி செய்யப்படும் எனவும், அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**மிளகாய் வத்தல் வரத்து அதிகரிப்பு குவிண்டால் ரூ.9,000க்கு விற்பனை**

**மேட்டூர்**: கொளத்தூர் சந்தைக்கு மிளகாய் வத்தல் வரத்து அதிகரித்தது. இதனால், ஒரு குவிண்டால் வத்தல் விலை, 9,000 ரூபாயாக சரிந்தது. மேட்டூர் தாலுகா, கொளத்தூரில் சுற்றுப்பகுதியில் மிளகாய் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது மிளகாய் அறுவடை நடக்கிறது. நேற்று பண்ணவாடி, சேத்துக்குழி, மூலக்காடு, தண்டா, தார்க்காடு, கோவிந்தபாடி, செட்டியூர்

சுற்றுபகுதிகளில் இருந்து, கொளத்தூர் சந்தைக்கு, 700 மூட்டைக்கு மேல் மிளகாய் வத்தல் விற்பனைக்கு வந்தது. கடந்த மாதம் மிளகாய் வத்தல், ஒரு குவிண்டால், 10,500 முதல், 11,000 ரூபாய்க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். இருவாரமாக வரத்து அதிகரித்தால் மிளகாய் வத்தல் விலை வீழ்ச்சியடைந்தது. நேற்று ஒரு குவிண்டால் அதிகபட்சமாக, 9,000 ரூபாய்க்கு விற்றது. மிளகாய் வத்தல் கிலோவுக்கு, 20 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்தது விவசாயிகளை விரக்தியில் ஆழ்த்தியது.

**வெங்காயம் அறுவடைப்பணி தீவிரம்: விலை குறைவால் விவசாயிகள் கவலை**

**கோபிசெட்டிபாளையம்**: குண்டேரிப்பள்ளம் பகுதியில், சாகுபடி செய்யப்பட்டுள்ள வெங்காயம், அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது. மொத்த விற்பனையில் கிலோ, 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கோபியை அடுத்த டி.என்.பாளையம், கள்ளிப்பட்டி, கொங்கர்பாளையம், வினோபா நகர், வாணிப்புத்தூர் உள்ளிட்ட பகுதிகளில், சி.எஸ்., 450, சி.எஸ்., 911, சி.எஸ்., 450, ஏ.சி., 863 ஆகிய ரகங்கள் பயிரிடப்படுகிறது. கார அமிலதன்மை, 6 முதல், 7 சதவீத அளவில் இருந்தால், சின்ன வெங்காயம் நன்கு செழித்து வளரும். இப்பகுதியில், 2,500 ஏக்கரில் ஆண்டுதோறும், இருமுறை சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. ஏக்கருக்கு, ஆறு டன் முதல், ஏழு டன் வரை சின்ன வெங்காயம் விளைச்சல் கிடைக்கும். ஆனால், தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக, மகசூல் பாதிப்பு ஏற்பட்டதால், ஒரு ஏக்கருக்கு, இரண்டு டன் சின்ன வெங்காயம் மட்டுமே விவசாயிகளுக்கு கிடைக்கிறது.

கடந்த ஆண்டு, வெங்காயம் அறுவடை நேரத்தில், ஒரு கிலோ, 60 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பாண்டு, வெங்காயம் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. சில்லறை விலையில், ஒரு கிலோ, 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும், குண்டு வெங்காயம் (25 கிலோ முதல் 28 கிலோ), 220 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சில்லறை விற்பனையில், ஒரு கிலோ, 10 ரூபாய்க்கு விற்பனையாகிறது. வெங்காயம் அறுவடையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கூறியதவது: ஒரு எக்டேர் நடவு செய்ய, 1,000 கிலோ விதை வெங்காயம்

தேவைப்படுகிறது. களை கட்டுப்பாடு, பின்நேர்த்தி செய்தல் மற்றும் பூச்சி தாக்குதல் இல்லாமல் இருந்தால், நடவு செய்யப்பட்ட, 70 முதல், 90 நாட்களில் எக்டேருக்கு, 12 முதல், 16 டன் வெங்காயம் மகசூல் கிடைக்க வாய்ப்புண்டு. தண்ணீர் பற்றாக்குறையால், சின்னவெங்காயம் உற்பத்தி குறைந்துள்ளது. அறுவடை செய்யப்படும் இடத்திலேயே, சில்லறை விலையில், ஒரு கிலோ, 10 ரூபாய்க்கு, நேரடியாக விற்பனை செய்கிறோம். வியாபாரிகளுக்கு மொத்த விலையில், குண்டு வெங்காயம், 220 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. டி.என்.பாளையம் சுற்று வட்டாரத்தில், வெங்காய அறுவடை துவங்கி உள்ளதால், வெங்காயத்தின் விலை மேலும் வீழ்ச்சியடைய வாய்ப்பு உள்ளது, என்றனர்.

**நீர் நிலைகளில் உப்புக்கட்டி வைத்து நடவடிக்கை!: வனவிலங்குகள் இறப்பை தடுக்க முயற்சி**

**கோபிசெட்டிபாளையம்**: வனப்பகுதியில் உள்ள நீர்நிலைகள் வறண்டு வருவதை தொடர்ந்து, வன விலங்குகளுக்கு உடற்புழு நோய் தாக்காமல் இருக்க, உப்பு கட்டி வைக்கும் பணியில், வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர். கோபி சுற்று வட்டாரத்தில் உள்ள வனப்பகுதியில், கடந்த ஆண்டில் பெய்த ஓரளவு மழையால், வனங்கள் ஓரளவு செழிப்படைந்தன. மீண்டும் அக்னி வெயில் போல், வெயிலின் தாக்கம் உள்ளதால், வனப்பகுதியில் உள்ள மரம், செடி, கொடிகள் மீண்டும் காய துவங்கி உள்ளன. வன விலங்குகள் சாப்பிடும் மரக்கிளைகள், காய்ந்து காணப்படுகிறது. வனப்பகுதியில் உள்ள காட்டாறு, குட்டைகள் பெரும்பாலும் வறண்டு விட்டது. கல்லூத்து, கல்யாணபாறை, மாதேஸ்வரன் கோவில் குட்டை மற்றும் குண்டேரிப்பள்ளம், பெரும்பள்ளம் போன்ற இடங்கள் மற்றும் வனத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள, வன குட்டைகளில் மட்டுமே தண்ணீர் உள்ளது. வனப்பகுதியில் தண்ணீர் இல்லாததால், யானை, காட்டெருமை, மான் உள்ளிட்டவை கூட்டம், கூட்டமாக தண்ணீர் இருக்கும் இடத்துக்கு வர துவங்கி உள்ளன.

குறிப்பாக குண்டேரிப்பள்ளம் அணையை நோக்கி, இரவு நேரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் வந்து, தண்ணீர் குடித்து செல்வது வாடிக்கையாகி விட்டது.

இந்நிலையில், கடந்த ஆண்டு கடும் வறட்சியால், குட்டைகளில் உள்ள தண்ணீரை வனவிலங்குகள் குடிக்க துவங்கியது. யானை உள்ளிட்ட விலங்குகளுக்கு உடற்புழு தாக்கம் ஏற்பட்டது. சத்திமங்கலம் வனக்கோட்டத்தில், ஏழுக்கும் மேற்பட்ட யானைகள் பலியானது. இதில், டி.என்.பாளையம் வனசரகத்துக்கு உட்பட்ட குண்டேரிப்பள்ளம் அணைப்பகுதியில் மட்டும், இரண்டு யானைகள் பலியானது. நடப்பாண்டு தற்போது வறட்சி ஏற்பட்டுள்ளதால், வன விலங்குகள், நீர் நிலைகளை நோக்கி வருகின்றன. யானைகளுக்கு உடற்புழு நோய் தாக்கம் ஏற்படாத வகையில், நீர் நிலைகளில் உப்பு கட்டி வைக்கும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர். வனத்துறை அலுவலர்கள் கூறியதாவது: வனப்பகுதியில் வறட்சி நிலவ துவங்கி உள்ளது. வன குட்டைகள், அணை பகுதியில், வன விலங்குகள் தண்ணீர் குடித்து செல்கின்றன. வறட்சியான நேரத்தில் வன விலங்குகளுக்கு உடற்புழு நோய் தாக்கம் ஏற்படுகிறது. வன விலங்குகள் பலியாவதை தடுக்கும் வகையில், நடப்பாண்டு முன் எச்சரிக்கை நடவடிக்கையாக, நீர் நிலைப்பகுதியில் உப்பு கட்டி வைக்கிறோம். தண்ணீர் குடிக்க வரும் வன விலங்குகள், உப்பு கட்டியை சாப்பிடுவதன் மூலம், விலங்குகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது. வன விலங்குகள் பலியாவது தடுக்கப்படும். சத்தி வனக்கோட்டத்தில் அனைத்து நீர் நிலைகள், வன விலங்குகள் தண்ணீர் குடிக்க வரும் அணைப்பகுதியில் உப்பு கட்டி வைக்கப்படுகிறது, என்றனர்.

## காவடிபட்டியில் வயல் விழா

**கமுதி,:**

கமுதி ஒன்றியம் காவடிபட்டியில், நெற்பயிரில் வறட்சியை தாங்கும் இளஞ்சிவப்பு பாக்டீரியா கரைசல் தெளிப்பு செயல்விளக்கம் மற்றும், வயல் விழா நடந்தது.உழவியல் துறை உதவி பேராசிரியர் துக்கையண்ணன் வரவேற்றார். கமுதி ஒன்றிய வேளாண் உதவி இயக்குனர் சக்கரவர்த்தி தலைமை வகித்தார். மதுரை வேளாண் கல்லூரி நுண்ணுயிரியல் துறை தலைவர் கோபால் முன்னிலை வகித்தார்.இளஞ்சிவப்பு பாக்டீரியா செயல்பாடுகள் மற்றும் அதன் நன்மைகள்

குறித்து ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் துரைசிங்: இளஞ்சிவப்பு பாக்டீரியா. இலையில் நீர் ஆவியாவதை குறைக்கிறது. விளைச்சல் தருணத்தில் ஏற்படும் வறட்சியை நூறு சதவீதம் தாங்கும் பண்புடையது. ஏக்கருக்கு 200 மில்லி இளஞ்சிவப்பு பாக்டீரியா கரைசலை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். காலை 9 மணிக்கு பயிரில் தெளிப்பது மிகவும் நல்லது, என்றார். பேராசிரியர்கள் ஆனந்த், ராம்குமார், நாகராஜ் பங்கேற்றனர். மனையியல் உதவி பேராசிரியர் மீனாட்சி நன்றி கூறினார்.

## மேல்மலையனூர் பகுதியில் எள் சாகுபடி அமோகம்

**அவலூர்பேட்டை**:மேல்மலையனூர் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதால் விவசாயிகள் எள் சாகுபடி செய்துள்ளனர்.மேல்மலையனூர் ஒன்றியத்தில் பல பகுதியிலும் மழை பொய்த்து போனதால் கிணறுகளில் தண்ணீர் இல்லை. பல இடங்களில் நெல் நாற்றுகள் காய்ந்தன. தண்ணீர் குறைவாக உள்ளதால் சில விவசாயிகள் எள் பயிரிட்டுள்ளனர். 3 மாத பயிரான எள்ளுக்கு குறைந்தளவு தண்ணீர் இருந்தாலே போதுமானது.இதனால் நிலத்தை கரம்பாக வைக்காமல் தனியாரிடமிருந்து கடந்த மாதம் எள் விதைகளை வாங்கி விவசாயிகள் விதைத்தனர். இதற்கு குறைந்தளவு உரமும், தெளிப்பு மருந்தும் இருந்தாலே போதும்.தற்போது எள் செடிகள் குறைந்த நீரில் வளர்ச்சி கண்டு சாகுபடிக்கு தயாராக உள்ளது.

## நீர்வள நிலவள திட்டசிறப்பு கூட்டம்

**கள்ளக்குறிச்சி**: தமிழ்நாடு அரசின் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் மாதிரி கிராமங்களுக்கான சிறப்பு கூட்டம் நடந்தது.கள்ளக்குறிச்சி அடுத்த தென்கீரனூர் மாதிரி கிராமத்தில் நடந்த கூட்டத்திற்கு பொதுப் பணித்துறை நீர் ஆதார துறை உதவி பொறியாளர் பிரபு தலைமை தாங்கினார். வேளாண்மை பொறியியல் துறை இளம்பொறியாளர் பஷீர்அஹமது, சிறுவத்தூர் கால்நடை பரா மரிப்பு துறை உதவி மருத்துவர் சுகம், வேளாண் வணி கத்துறை அலுவலர் சிவா முன்னிலை

வகித்தனர்.ஏரி மற்றும் விவசாய நிலங்கள் கலர் பொடிகளால் வரையப்பட்டு விவசாயிகளின் குறைகள் மற்றும் கருத்துகள் கேட்டறிந்து நீர்வள நிலவள திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சீரமைப்பு பணிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. ஊராட்சித் தலைவர் கோமதிபூமாலை, நீரினை பயன்படுத்துவோர் சங்க உறுப்பினர்கள், பாசன சங்க நிர்வாகிகள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பலர் பங்கேற்றனர்.

**கொண்டை கடலை அறுவடை துவக்கம் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில் மானாவாரியாக பருத்தி, மரவள்ளி, கொத்தமல்லி, கொண்டை கடலை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, எஸ்.கொட்டாவூர், செங்கல்மேடு, பாடி, பாப்பாரப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், கொண்டை கடலை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சில ஆண்டுகளாக மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால், கொண்டை கடலை உள்ளிட்ட மானாவாரியாக சாகுபடி செய்து வந்த பயிர்களின் சாகுபடி பாதிக்கப்பட்டது. இந்நிலையில், தர்மபுரி மாவட்டத்தில், கடந்தாண்டு வட கிழக்கு பருவமழை ஓரளவுக்கு கை கொடுத்ததால், ஆயிரம் ஏக்கருக்கு மேல் கொண்டை கடலை சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டனர்.

மேலும், இந்தாண்டு பனி காலத்தில், பகல் நேரங்களில் வெயிலின் தாக்கம் குறைந்திருந்ததால், கொண்டை கடலை மகசூல் அதிரித்துள்ளது. இந்நிலையில், மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கொண்டை கடலை அறுவடை துவங்கியுள்ள நிலையில், கொண்டை கடலை விலை உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து, பாடியை சேர்ந்த விவசாயி கண்ணன் கூறியது: இந்தாண்டு மாவட்டத்தில் கொண்டை கடலைக்கு தேவையான பருவமழை பெய்ததாலும், கொண்டை கடலை வளர்ச்சிக்கு ஏதுவான தட்பவெப்பம் நிலவுவதாலும், கொண்டை கடலை மகசூல் அதிகரித்துள்ளது. தற்போது, ஒரு கிலோ கொண்டை கடலையை, 45 ரூபாய் முதல், 60 ரூபாய் வரை தரத்துக்கு தகுந்தாற்போல், விவசாயிகள் வாங்கி செல்கின்றனர். கடந்தாண்டு

விலையை விட சற்று அதிகமாக உள்ளதால், கொண்டை கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர், என்றார்.

## ரசீது வழங்காத உர விற்பனையாளர்களுக்கு. எச்சரிக்கை!: விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவாதம்

**தர்மபுரி**: தர்மபுரி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், கலெக்டர் விவேகானந்தன் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடந்தது. கலெக்டர் விவேகானந்தன்: தர்மபுரி மாவட்ட விவசாயிகள் விவசாயத்தில் நவீன யுத்திகளை கையாண்டு வருகின்றனர். நமது மாவட்டத்தில் இருந்து சிறந்த விவசாயிகள், நாக்பூருக்கு செல்ல தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

விவசாயி சுந்தரம்: மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான உரக்கடைகளில் விவசாயிகள் வாங்கும் உரம், பூச்சி மருந்து, விதை ஆகியவற்றுக்கு ரசீது வழங்குவதில்லை. இதேபோன்று, பூச்சி மருந்து, உரம் ஆகியவை வாங்கும் போது, அவற்றின் பயன் குறித்த நோட்டீஸ்கள் வழங்குவதில்லை. இதனால், விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும் போது, உரிய நிவாரணம் வழங்க முடியாததுடன், அரசுக்கும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. கலெக்டர் விவேகானந்தன்: மாவட்டத்தில் உள்ள, 238 உரக்கடை உரிமையாளர்களின் கூட்டம் நடத்தப்பட்டது. இதில், விவசாயிகள் வாங்கும் உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட அனைத்து பொருட்களுக்கும் ரசீது வழங்கவும், அவற்றை பயன்படுத்தும் முறை குறித்த நோட்டீஸ்களை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு ரசீது வழங்க மறுக்கும், உரக்கடைகள் உரிமம் ரத்து செய்யப்படும். இது குறித்து விவசாயிகள், "1077' என்ற இலவச தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.

விவசாயி ராஜூ: பாப்பாரப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில், இரவு நேரங்கள் பாம்பு கடித்தவர்கள் மற்றும் நாய் கடித்தவர்களுக்கு அங்கு பணியாற்றுபவர்கள் தடுப்பூசி வழங்க மறுக்கின்றனர். இதனால், பாப்பாரப்பட்டி மற்றும் அதனை ஒட்டியுள்ள பல்வேறு கிராமங்கள், மலைக்கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் அவதியில் உள்ளனர். இதனால், உயிர் பலியாகும் அபாயம் உள்ளது. கலெக்டர்

விவேகானந்தன்: இதுகுறித்து, உடனடியாக விசாரித்து, அனைத்து நேரங்களிலும், பாம்பு, நாய் கடிக்கு தடுப்பூசி வழங்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.
விவசாயி கிருஷ்ணன்: தர்மபுரி யூனியனில் உள்ள ஏரி பாசன கால்வாய்கள், பல இடங்களில் சேதமாகி, பாசன காலங்களில் தண்ணீர் வீணாகி வருகிறது. இதை தடுக்க, விவசாய நிலங்களில் சேதமாகி உள்ள கால்வாய்களை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வண்டும்.
கலெக்டர் விவேகானந்தன்: தேசிய ஊரக வேலை வாய்ப்புதிட்டத்தில், விவசாய நிலங்களில் வழியாக செல்லும் பாசன கால்வாய்களை சீரமைக்க, அரசு அனுமதி கொடுத்துள்ளது. தேவையான நிதி உள்ளதால், விவசாயிகளின் நலன் கருதி, சேதமான கால்வாய்களை, தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் சீரமைக்கும் நடவடிக்கையில் பொதுப்பணித்துறையினர் ஈடுபடலாம்.
முன்னதாக, காட்டு விலங்குகளாக பாதிக்கப்பட்ட, 13 விவசாயிகளுக்கு வனத்துறை சார்பாக, ஐந்து லட்சத்து, 20 ஆயிரத்து, 650 ரூபாய்க்கான செக்கை, கலெக்டர் விவேகானந்தன் வழங்கினார். விவசாய நிலங்களில், பாரம்பரியமான காட்டுயானம் நெல்லை சாகுபடி செய்ய வலியுறுத்தி, கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகளுக்கு, காட்டுயான விதை நெல்லை, முன்னாள் எம்.எல்.ஏ., மாதப்பன் வழங்கினார். கொடிநாள் நிதியாக, கலெக்டர் விவேகானந்தனிடம், 7,100 ரூபாய்க்கான டி.டி.,யை, விவசாயி சுந்தரம் வழங்கினார். டி.ஆர்.ஓ., ராமர் உட்பட பல்வேறு அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விலையில்லா ஆடுகள் வழங்கல்

**கோத்தகிரி**: கோத்தகிரி ஜக்கனாரை ஊராட்சி பயனாளிகளுக்கு, விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டன.ஜக்கனாரை ஊராட்சியில் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில் 80 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, படிப்படியாக ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இறுதி கட்டமாக, நேற்று 15 பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கும் விழா நடந்தது. அ.தி.மு.க., மாவட்ட செயலாளர் கலைச்செல்வன் பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகளை வழங்கி பேசினார். இதில், வார்டு உறுப்பினர் லதா பெள்ளி உட்பட பலர் பங்கேற்றனர்.

## சுத்திகரிப்பு மையம் இல்லாதசாயப்பட்டறைகளுக்கு நோட்டீஸ்

**சின்னாளபட்டி**:சின்னாளபட்டியில் உள்ள சாயப்பட்டறைகளுக்கு மாசு கட்டுப்பாட்டு வாரியம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. சின்னாளபட்டி பேரூராட்சி மற்றும் காந்திகிராமம், அம்பாத்துரை ஊராட்சி பகுதிகளில் 50 க்கும் மேற்பட்ட சாயப்பட்டறைகள் இயங்குகின்றன. இவற்றில் இருந்து சாயகழிவுநீர், பல ஆண்டுகளாக சுத்திகரிக்காமல் வெளியேற்றப்பட்டது. இதனால் நிலத்தடி நீர் முற்றிலும் மாசுபட்டுள்ளது. விவசாயத்திற்கான கிணறுகள், பொதுமக்கள் பயன்பாட்டிற்கான ஆழ்துளை கிணறுகளில், நீரின் தன்மை, நிறம் மாற்றம் அடைந்தன. இந்த நிலையை நன்கு அறிந்தும் மாசுகட்டுப்பாட்டு வாரியம் நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை.

எனவே, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், நுகர்வோர் அமைப்பினர் தமிழக முதல்வருக்கு புகார் மனு அனுப்பினர். இதில், குடியிருப்பு பகுதிகளில் சாயப்பட்டறைகள் இயங்குவதை தடை செய்ய வேண்டும். மாற்று இடத்தில் "ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ்'(ஆர்.ஓ.) தொழில் நுட்பத்துடன் கூடிய சுத்திகரிப்பு மையங்கள் அமைக்கும் சாயப்பட்டறைகள் மட்டும் இயங்க அனுமதி வழங்க வேண்டும், என, கோரிக்கை விடுத்திருந்தனர்.இதையடுத்து, "ஆர்.ஓ. பிளான்ட்' கள் இல்லாத அனைத்து சாயப்பட்டறைகளுக்கும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

## நிலக்கடலை தோல் உரிக்க இயந்திரம் : பொறியியல் மாணவர் சாதனை

**தேனி**: நிலக்கடலை தோல் உரிக்கும் இயந்திரத்தை கண்டறிந்து, தேனி பட்டதாரி வாலிபர் சாதனை படைத்துள்ளார்.தேனி சுப்பன்செட்டி தெருவை சேர்ந்த எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் பட்டதாரி லோகநாதன்காமராஜ், 27. இவரது தந்தை காமராஜ், கடந்த 30 ஆண்டுகளாக ஆட்டோ மொபைல் தொழில் நடத்தி வருகிறார். படிப்பு முடித்ததும், அப்பாவுடன் சேர்ந்து தொழிலில் இறங்கிய லோகநாதன் காமராஜ், புதிதாக சாதனை படைக்க வேண்டும் என நினைத்தார்.தேனியில் வறுத்த நிலக்கடலையை தோல் உரித்து, அதனை பாக்கெட் போட்டு

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். இப்படி கடலை தோல் உரிக்கும் பணியில் பெண்கள் அதிகளவில் ஈடுபடுகின்றனர். கையில் உரித்தால் ஒரு வேலை நாள் முழுக்க 50 கிலோ மட்டுமே உரிக்க முடியும். இதனால் கூலி மிகவும் குறைவாகவே கிடைக்கும்.இதனை குறைந்த செலவில் அதிகளவில் செய்ய திட்டமிட்ட லோகநாதன்காமராஜ் கடந்த 2011ல் தனது தந்தையுடன் இணைந்து, இயந்திரம் தயாரிக்கும் முயற்சியில் இறங்கினார். மூன்றாண்டு முயற்சிக்கு பின் இயந்திரம் தயாரித்தார். இந்த இயந்திரம் ஒரு மணி நேரத்தில் 100 கிலோ வறுத்த கடலையை தோல் உரித்து பிரித்து கொடுத்து விடுகிறது.இதில் உரிக்கப்படும் கடலை, 75 சதவீதம் முழு பருப்பாகவும், 15 சதவீதம் இரண்டாக உடைந்தும், 5 சதவீதம் உரியாமலும், மீதி உமியாகவும் வரும். கையில் உரிப்பதோடு ஒப்பிடுகையில் இயந்திரத்தின் மூலம் உரிப்பதால் சேதாரம் மிக, மிக குறைவு தான். உடைந்த பருப்பை கடலை மிட்டாய்க்கும், முழு பருப்பை ஏற்றுமதிக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். உமியை எரிபொருளாக பயன்படுத்த முடியும்.லோகநாதன் காமராஜ் கூறியதாவது: சிங்கில்பேஸ் மின்சாரத்தில் இந்த இயந்திரத்தை இயக்க முடியும். 100 கிலோ பருப்பு உரிக்க 3 யூனிட் மின்சாரம், (21 ரூபாய்) மட்டுமே செலவாகும். எனவே, இதனை குடிசை தொழிலாகவும் பயன்படுத்த முடியும். பெரிய தொழிற்சாலைகளுக்கு 1 மணி நேரத்தில் ஆயிரம் கிலோ கடலை உரிக்கும் இயந்திரம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். இதனை விற்பனை ரீதியாக தயாரிக்கும் எண்ணமும் உள்ளது. இன்னமும் விலை நிர்ணயிக்கவில்லை என்றார். தொடர்புக்கு: 88703 26671, 98943 79321.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஏற்றுமதியை அதிகரிக்க விவசாயிகள் கோரிக்கை



**தாராபுரம்**: திருப்பூர் மாவட்டத்தில் தாராபுரம், பல்லடம் உள்ளிட்ட பகுதிகளில் சின்ன வெங்காயம் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு சின்ன வெங்காயத்தின் விளைச்சல் குறைந்ததால் விலை அதிகரித்தது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு சின்ன வெங்காயம் கிலோ ரூ.120 வரை விற்றது. நடப்பு பருவத்தில் அமராவதி புதிய, பழைய ஆயக்கட்டு மற்றும் கிணற்று பாசனத்தில் அதிகளவில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான பகுதிகளில் இன்னும் 10 15 நாளில் அறுவடை துவங்க இருப்பதால் அந்த இடங்களுக்கே வியாபாரிகள் நேரில் சென்று கொள்முதல் செய்கின்றனர். கடந்த வாரம், கொள்முதல் விலை கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரை இருந்தது. இந்த விலை கட்டுப்படி ஆகாது என்பதால், விவசாயிகள் வெங்காயத்தை இருப்பு வைத்து விற்க

முடிவு செய்தனர்.

தற்போது வியாபாரிகளிடம், சின்ன வெங்காயத்தின் இருப்பு குறைந்து வருகிறது. இதனால், அதன் கொள்முதல் விலையில் சற்று ஏற்றம் காணப்பட்டது. இதுகுறித்து திருப்பூர் மாவட்ட விவசாயிகள் கூறியதாவது: சின்ன வெங்காயம், தமிழகத்தில் திருப்பூர் மாவட்டத்தில் தான் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு நாற்று, உரம், மருந்து, ஆட்கள் கூலி, போக்குவரத்து என அறுவடை வரை மொத்தமாக ரூ.70ஆயிரம் செலவாகிறது. விவசாயிகளுக்கு கிலோ ரூ.25க்கு மேல் கிடைத்தால் தான் ஓரளவு லாபம் கிடைக்கும். இல்லை என்றால் பாதிப்பு தான். இந்த விலை வீழ்ச்சியை கட்டுப்படுத்தும் வகையில், மத்திய அரசு முன்கூட்டியே சின்ன வெங்காயத்தை ஏற்றுமதிக்கு அனுமதித்து, அதை அதிகரிக் கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## மானிய விலையில் தீவன விநியோகம் 4 ஆயிரம் விவசாயிகளுக்கு அடையாள அட்டை

**சேலம்**, : மானிய விலையில் தீவனம் வாங்க சேலம் மாவட்டத்தில் இதுவரை 4 ஆயிரம் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது என கால்நடை பராமரிப்புத்துறை சேலம் மண்டல அதிகாரி தெரிவித்தார்.

தமிழகம் முழுவதும் மழை பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் எதிர் வரும் கோடைக்காலத்தில் கால்நடைகளுக்கு உணவுப்பற்றாக்குறை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதை சமாளிப்பதற்காக சேலம் மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போருக்கு மானிய விலையில் உலர் தீவனம் வைக்கோல், மக்காச்சோளம், சோளத் தட்டு விநியோகம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக சேலம் நரசோதிப் பட்டி, நங்கவள்ளி, மேச்சேரி, கொங்கணாபுரம், தலை வாசல் உள்ளிட்ட பகுதியில் உள்ள கால்நடை மருந்தகங்களில் கால்நடை தீவனகிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு கால் நடை பராமரிப்புத்துறை சார்பில், விவசாயிகளுக்கு மானிய விலையில் கால்நடை தீவனம், அடையாள அட்டை கள் வழங்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது.

இது குறித்து கால்நடை பராமரிப்புத்துறை சேலம் மண்டல இணை இயக்குனர்

சிவப்பிரகாசம் கூறியதாவது:
கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்க, அரசு சேலம் மாவட்டத்துக்கு ரூ50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தற்போது கால்நடை மருந்தகங்களில் கடந்த சில நாட் களாக, கால்நடை வளர்ப்போ ருக்கு தீவன அட்டை வழங்கப் பட்டு வருகிறது. இந்த அட்டைகள் வைத்திருப்போருக்கு தினசரி மாடு ஒன்றுக்கு 3 கிலோ வீதம் வாரத்திற்கு 21 கிலோ வரை உலர்தீவனம் வழங்கப்படுகிறது. இந்த தீவனத்தை விவசாயிகள் தினசரி யோ அல்லது வாரந்தோறுமோ பெற்றுக்கொள்ளலாம்.  வெளிச்சந்தையில் வைக் கோல் ரூ6 முதல் ரூ8 என விற்பனை செய்யப்படுகிறது. இதை அரசு மானிய விலை யில் கிலோ ரூ2க்கு வழங்குகிறது. இந்த மையங்களுக்கு அருகில் உள்ள விவசாயிகள் ஜனவரி மாத இறுதிக்குள் நேரில் சென்று கால் நடை தீவன அட்டைக்கு பெயர்பதிவு செய்து கொள்ளலாம்.
சேலம் மாவட்டத்தில் இது வரை 4 ஆயிரம் விவசாயிகளுக்கு, கால்நடை தீவன அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அடையாள அட்டை பெற்றவர்களுக்கு பிப்ரவரி 15ம் தேதி முதல் தீவனம் வழங்கப்படும். இவ் வாறு இணை இயக்குனர் சிவப்பிரகாசம் கூறினார்.

**உழவர்சந்தையில் மொத்த வியாபாரிகள் ஆதிக்கம் பொதுமக்கள் பாதிப்பு**

**திருப்பூர்**, : திருப்பூர்- பல்லடம் ரோடு உழவர்சந்தையில் மொத்த வியாபாரிகளின் ஆதிக்கத்தால் பொதுமக்கள் உழவர்களிடம் இருந்து நேரடியாக காய்கறிகளை வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது.
திருப்பூரில் பல்லடம் ரோடு, பி.என்.ரோடு என இரண்டு இடங்களில் உழவர்சந்தைகள் செயல்படுகின்றன. விவசாயிகளிடம் இருந்து நேரடியாக பொதுமக்கள் தங்களுக்கு தேவையான காய்கறிகளை வாங்குவதற்கும், இருதரப்பினரும் பயன்பெற வேண்டும் என்பதற்காக உழவர்சந்தை உருவாக்கப்பட்டது. ஆனால், உழவர் சந்தைகளில் மொத்த வியாபாரிகள் அதிகாலை 4 மணிக்கு சென்று, பல்வேறு இடங்களில் இருந்து உழவர்கள் கொண்டு வரும் காய்கறிகளை மொத்தமாக குறைந்த விலைக்கு கொள்முதல்

செய்து விடுகின்றனர்.

பின்னர் அவற்றை, உழவர்சந்தைகளில் சிறுவியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். இதனால், உழவர்களுக்கும், பொதுமக்களுக்கும் கிடைக்க வேண்டிய நியாயமான பலன் கிடைக்காமல் போய் விடுகிறது. மேலும் மாநகரில் சிறிய மளிகை மற்றும் காய்கறி கடைகள் ஆயிரக்கணக்கில் உள்ளன.

இந்த அனைத்து சிறுவியாபாரிகளும் உழவர்சந்தைகளை நம்பி உள்ளனர். பழைய பஸ் நிலையம் எதிரில் உள்ள தினசரி மார்க்கெட் வியாபாரிகளும் உழவர்சந்தையில் தான் கொள்முதல் செய்கின்றனர். உழவர்சந்தையில் கொள்முதல் செய்து கிலோ ரூ.1வரை லாபம் வைத்து விற்பனை செய்கின்றனர். இதனால் சிறுவியாபாரிகளும் உழவர்சந்தையை நாடுகின்றனர்.

இந்நிலையில் திருப்பூர்- பல்லடம் ரோடு உழவர்சந்தையில் மொத்த வியாபாரிகளின் ஆதிக்கத்தால் காலை 7 மணி வரை பொதுமக்கள் காய்கறிகளை வாங்க முடிவதில்லை என புகார் எழுந்துள்ளது. மொத்த வியாபாரிகள் உழவர்களிடம் இருந்து அனைத்தையும் கொள்முதல் செய்வதால் உழவர்சந்தைகள் காலை 6 மணிக்கே வெறிச்சோடி விடுகிறது. எனவே, மொத்த வியாபாரிகள் உழவர்சந்தைக்குள் வருவதை தடுத்து தக்க நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**மானிய விலையில் விவசாயிகளுக்கு விதைகள் வினியோகம்**

**கடலூர்**, : கடலூர் விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை மூலம் தக்காளி மற்றும் மிளகாய் விதைகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகின்றன. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் வீரிய ஒட்டு தக்காளி மற்றும் மிளகாய் விதைகள் வழங்கப்படுகிறது. இதனுடன் பயிர் பாதுகாப்பு மருந்துகளும் விநியோகம் செய்யப்பட உள்ளது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 1 ஹெட்டேர் வரை மானியம் அனுமதிக்கப்படுகிறது.

தேவைப்படும் விவசாயிகள் தங்களது நில சிட்டா மற்றும் அடங்கல் ஆவணங்களை முன் கூட்டியே தரகம்பட்டி தோட்டக்கலை அலுவலகத்தில் சமர்ப்பிக்க

கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தகவலை தோட்டக்கலை உதவி இயக்குநர் வீரமணி தெரிவித்துள்ளார்.

**மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி**

**புதுக்கோட்டை,**: புதுக்கோட்டை அருகே கம்மங்காடு கிராமத்தில் பண்ணை கழிவுகளிலிருந்து மண்புழு உரம் தயாரித்தல் குறித்த பயிற்சி மற்றும் செயல் விளக்கம் நடந்தது.

இப்பயிற்சிக்கு வேளாண் உதவி இயக்குநர் ரவிச்சந்திரன் தலைமை வகித்து பேசுகையில், நிகழ் மண் வளத்தினை பாதுகாத்திட பசுந்தாள் உரமிடுதல், பயிர் சுழற்சி முறைகள் கையாளு தல், உயிர் உரங்கள் இடுதல், மண்புழு உரமிடல் போன்ற முறைகளை பயன்படுத்த வேண் டும் எனபதையும், வேளாண் அலுவலர் அண்ணாமலை மண்ணில் அங்ககச்சத்தினை அதிகப்படுத்திட இயற்கை உரங்கள் அதிகளவில் பயன்படுத்துவதின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

வேளாண் அலுவலர் பூபதிகண்ணன், மண்புழுவின் வகைகள் குறித்தும், மண்புழு உர உற்பத்திக்கான இடதேர்வு, தேவையான இடுபொருட்கள், தொட்டி அமைத்தல், குப்பை இடுதல் மற்றும் மண்புழு உரம் சேமிக்கும் முறைகள் குறித்து விளக்கினார். மண்புழு உரம் தயாரிக் கும் முறை செயல் விளக் கம் விவசாயி கலியபெருமாள் வயலில் விவசாயிகளுக்கு காண்பிக்கப்பட்டது. பயிற்சி ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவ லர் சக்திவேல் செய்திருந்தார்.

**தலைஞாயிறு சர்க்கரை ஆலையில் பிப். 2ம் தேதி அரவை துவக்கம்போக்குவரத்து மானியத்துடன் டன்னுக்கு ரூ.2,650 வழங்க முடிவு**

***சீர்காழி***, : தலை ஞாயிறு சர்க்கரை ஆலை யில் வரும் பிப்ரவரி 2ம் தேதி முதல் அரவை துவங்குகிறது.

சீர்காழி அருகே தலைஞாயிறில் உள்ள நடிப்பிசை புலவர் கே.ஆர்.ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநர் செம்புகுட்டி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கே.ஆர்.ராமசாமி கூட்டு றவு சர்க்கரை ஆலையில் 2013-14ம் ஆண்டிற் கான நடவுப்பருவ காலம் டிசம்பர் 2013ல் துவங்கப்பட்டு ஆலைக்கு கரும்பு பதிவு செய்யும் பணி நடந்து வருகிறது. இவ்வாண்டு நடவு செய்யப்படும் கரும்பிற்கு விதை கரும்புகள் தேவைப்படும் அங்கத்தினர், தமது பகுதி கோட்ட கரும்பு அலுவ லரை அணுகி புதிய ரக விதை கரும்புகளை பெற்று கரும்பு
நடவிற்கு பயன்படுத்தலாம். மேலும் நடவு கரும்பிற்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.38,000, மறுதாம்பிற்கு ரூ.30,000 தேசிய மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம்
பயிர்க்கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சொட்டு நீர் பாசனம் அமைக்கும் சிறு,குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம், மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் வழங்கப்படும். தமிழக அரசின் சிறப்பு திட்டமான நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் நடைமுறையில் உள்ளது. 2013-14ம் ஆண்டில் அரவை பருவம் வரும் பிப்ரவரி 2ம் தேதி காலை துவங்குகிறது. இவ்வாண்டு ஆலை அரவைக்கு அனுப்பப்படும் கரும்பிற்கு போக்குவரத்து மானியத்துடன் டன் ஒன்றுக்கு ரூ.2,650 வழங்கப்பட உள்ளது. ஆலை நிர்வாகம் குறிப்பிடுகிற தேதிகளில் அரவைக்கு தேவையான அளவு கரும் பினை சப்ளை செய்து ஆலையின் அரவை தொடர் ஓட்டம் நல்ல முறையில் இயங்க அங்கத்தினர்கள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும். இவ்வாறு ஆலையின் மேலாண்மை இயக்குநர் செம்புகுட்டி தெரிவித்துள்ளார்.

**கீழையூரில் தினமும் 500 மூட்டை நெல் கொள்முதல்**

**பூம்புகார்**, : கீழையூர் நெல் கொள்முதல் நிலையத்தில் தினமும் 500 மூட்டை நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.
நாகை மாவட்டம் பூம்புகார் அருகே உள்ள கீழையூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்படுகிறது. இந்த நிலையத்திற்கு மணிக்கிராமம், கீழையூர், வானகிரி, நெய்தவாசல், மேலையூர், ஏராம்பாளையம், அடைக்கலபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து அறுவடை செய்யப்பட்ட சம்பா நெல் மூட்டைகள் விற்பனைக்கு கொண்டுவரப்படுகின்றன. 17 சதவிகிதம் வரை ஈரப்பதம் உள்ள தரமான நெல்களாக பிரித்து 40 கிலோ கொண்ட மூட்டைகளாக தரம் பிரிக்கப்படுகின்றன.

40 கிலோ கொண்ட சன்ன ரக மூட்டைக்கு ரூ1415, ஊக்கத்தொகையாக ரூ70 வழங்கப்படுகிறது. 40 கிலோ கொண்ட மோட்டா ரகத்துக்கு ரூ1360, ஊக்கத்தொகையாக ரூ50 வழங்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு சுமார் 450 முதல் 500 மூட்டைகள் கொண்டு வரப்படுகின்றன. விவசாயிகளுக்கு பணப்பட்டுவாடா உடனடியாக செய்யப்படுகிறது.

இதுகுறித்து நெய்தவாசல் பகுதியை சேர்ந்த விவசாயி மணி கூறுகையில், எங்கள் பகுதியிலிருந்து சரியான ஈரப்பதத்துடன் கொண்டு வரப்படும் நெல் மூட்டைகள் உடனடியாக விற்பனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்குரிய பணம் உடனடியாக பட்டுவாடா செய்யப்படுகிறது என்றார்.

## கோழிக்கு நோய் வராமல் தடுக்க பிப்.3 முதல் தடுப்பூசி முகாம்

**ஈரோடு**, : ஈரோடு மாவட்டத்தில் உள்ள கோழிகளுக்கு கோழிக்கழிச்சல் நோய் வராமல் தடுக்கும் விதமாக பிப்.3ம் தேதி முதல் 16ம் தேதி வரை அனைத்து பகுதிகளிலும் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் கோழிகளை வளர்க்கும் அனைத்து மக்களும் இந்த தடுப்பூசி முகாமில் கலந்து கொண்டு தங்களது கோழிகளுக்கு தடுப் பூசி போட்டுக் கொ ள்ள வேண்டும்.

தடு ப்பூசி போ டுவதன் மூலமாக கோ ழிகளின் இறப்பினை தடுத்து கோழி வளர்ப்பில் அதிக லாபம் பெறலாம். இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கலெக்டர் சண்முகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## காட்டேரி அரசு தோட்டக்கலை பண்ணையில் 50 சதவீத மானிய விலையில் தேயிலை நாற்றுகள் விற்பனை

**குன்னூர்**,: நீலகிரி மாவட்டத்தில் முக்கிய விவசாய தொழிலாளாக தேயிலை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த தேயிலை செடிகளை நடவு செய்ய மழைக்காலம் ஏற்ற காலமாக இருப்பதால் அந்த பருவத்தையே விவசாயிகள் தேர்வு

செய்து தேயிலை செடிகளை நடவு செய்து வருகின்றனர்.

தேயிலை விவசாயத்தை மேம்படுத்த தேயிலை வாரியம் பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. இந்த மானியங்களை பயன்படுத்தி தேயிலை விவசாயிகள் பல்வேறு மேம்பாட்டு பணிகளை செய்து வருகின்றனர். இதேபோல் தோட்டக்கலை துறை சார்பில் தரமான தேயிலை நாற்றுகள் உற்பத்தி செய்து அவை மா னிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தேயிலைக்கு விலை இருந்த காலகட்டத்தில் மானிய விலையில் தேயிலை நாற்றுகள் அதிகளவில் விற்பனையாகி வந்தன. மேலும் காலியாக இருந்த நிலப்பரப்பிலும் தேயிலை செடிகள் நடவு செய்யப்பட்டன.

இவ்வாறு புதிதாக நடவு செய்யப்பட்ட தேயிலை செடிகள் பூச்சிகள் மூலமா கவோ அல்லது நோய் தாக்குதலாலோ வளராமல் அழிந்து விட்டன. இவ்வாறு அழிந்த செடிகளுக்கு நடுவில் இடை நடவு என்று கூறப்படும் தேயிலை நாற்றுகளை நடவு செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர்தற்போது தோட்டக்கலை துறை சார்பில் தேயிலை நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. பதியன் முறையில் தரமான தேயிலை நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இடைநடவு செய்வதற்காக வைக்கப்பட்டுள்ள இந்த தேயிலை நாற்றுகள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

சிம்ஸ்பூங்காவிலுள்ள தோட்டக்கலை துறை அலுவலகத்தில் பணம் செலுத்தி காட்டேரி அரசு தோட்டக்கலை பண்ணையில் மானிய விலையில் தேயிலை நாற்றுகளை பெற்று கொள்ளலாம் என தோட்டக்கலை துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### சம்பா பயிரில்நெற்பழ அழுகல் நோய் கட்டுப்படுத்த யோசனை

**அரியலூர்**, : அரிய லூர் மாவட்டத்தில் சம்பா நெற் பயிரில் நெற்பழ அழுகல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ராஜ்கலா விவசாயிகளுக்கு யோசனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை:

அரியலூர் மாவட்டத்தில் 17 ஆயிரம் எக்டரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் இப்பயிரில் நெற்பழ அழுகல் நோய் தாக்குதல் திருமானூர் வட்டாரத்தில் பரவலாக காணப்படுகிறது. இது ஒரு வகை பூஞ்சாணத்தால் உண்டாகிறது. இதன் அறிகுறிகளாக இப்பூஞ்சாணம் தாக்கப்பட்ட செடியில் உள்ள கதிர் மணிகள் முதலில் பச்சை கலந்த பழுப்பு நிற நுண் துகள் பந்து போன்று மாறி, பின்பு சமமாகவும், மென்மையாகவும் உருமாறி மஞ்சள் நிற பூசண வித்துக்களால் நெல் மணியை சுற்றி இருக்கும். வெல்வெட் போன்ற வளர்ச்சி நெல்மணிகளின் மீது காணப்படும். கதிர்களின் குறைந்த அளவு நெல்மணிகள் மற்றும் நோய் தாக்கியிருக்கும் மற்றவை எல்லாம் நல்ல மணிகளாகவே இருக்கும்.

இந்நோய் தாக்குதலால் நெற்பயிரில் மகசூல் குறைவதோடு மட்டுமின்றி தானியங்களின் தரமும் குறைந்து விடுகிறது. மேலும் நோய் தாக்கிய வயலிலிருந்து பெறப்பட்ட விதைகளின் முளைப்புத் திறன் குறைந்து காணப் படும். நோய் கிருமிகள், காற்று, மண் மற்றும் விதைகள் மூலம் பரவக்கூடிய தன்மையுடையது. இந்நோயின் தாக்குதல் கோ43 நெல் ரகத்தில் அதிகமாக காணப்படுகிறது.

இதை கட்டுப்படுத்துவதற்கு பருவத்தே பயிர் செய்தல் தரமான விதைகளை தேர்ந்தெடுத்து விதைக்கவும். அறுவடையின் போது நோய் பூஞ்சாணம் தாக்கிய பயிர்களில் உள்ள வைக்கோல் மற்றும் கழிவுகளை அழித்துவிட வேண்டும்.

கிலோ விதைக்கு கார்பென்டாசிம் 4கிராம் அல்லது சூடோமோனாஸ் 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைத்தல் வேண்டும். அதிகமாக தழைச்சத்து இடுவதை தவிர்த்து பிரித்து இடவேண்டும். புரப்பிகோனசோல் 200 மி.லி ஏக்கர் (ஒரு மி.லி ஒரு லிட்டர் தண்ணீர்) அல்லது காப்பர் ஹைட்ராக்சைடு 500 கிராம்  ஏக்கர் (2.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில்) 200 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் ஒட்டும் திரவம் கலந்து இரு முறை 10 சதம் பூத்திருக்கும் தருணத்திலும் மற்றும் 75 சதம் பூத்திருக்கும் தருணத்திலும் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு செய்வதன் மூலம் நெற்பழ அழுகல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெறலாம். மேலும் விவரங் களுக்கு 97863 79600 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**ஆன்லைனில் பதிவு குறைதீர் கூட்டத்தில் தகவல்**

**தஞ்சை,** : வரும் கோடையில் தூர்வார வேண்டிய வாய்க்கால், குளங்கள், ஏரிகள் குறித்து விவசாயிகள் மனு அளித்து பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கலெக் டர் சுப்பையன் கேட்டுக்கொண்டுள்ளார்.

தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. கலெக்டர் சுப்பையன் தலைமை வகித்தார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சேகர், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணை பதிவாளர் சுப்பிரமணியன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் முகமது பாட்சா, மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர் சௌந்தராஜன் உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கலெக்டர் சுப்பையன் பேசும்போது, தஞ்சை மாவட்டத்தில் 2013-14ம் ஆண்டு சம்பா பருவத்தில் ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 77 எக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நேரடி விதைப் பின் மூலம் 2 ஆயிரத்து 682 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதுவரை சம்பா நெற்பயிர் 56 ஆயிரத்து 750 எக்டேர் பரப்பில் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

எக்டேருக்கு சராசரியாக 8,220 கிலோ நெல் மகசூல் கிடைத்துள்ளது. தாளடியில் 25,588 எக்டேர் நிலப்பரப்பிலும், கோடை பருவத்தில் 2 ஆயிரத்து 270 எக்டேர் பரப்பிலும் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு திருந்திய நெல் சாகுபடியின் மூலம் அதிக விளைச்சல் பெறும் விவசாயிக்கு ரூ.5 லட்சம் ரொக்கப் பரிசு அறிவித்துள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் தங்கள் பெயரை தங்கள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் பதிவு செய்துக் கொள்ளலாம்.

நடப்பு பருவத்திற்கான பயறு வகை சாகுபடி இலக்கு 78 ஆயிரத்து 900 எக்டேர் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு தேவையான சான்றுபெற்ற ஆடுதுறை 3, ஆடுதுறை 5, வம்பன் 3 ஆகிய ரக விதைகள் 152 மெ.டன் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட பயறு இயக்க திட்டத்தின்கீழ் இலைவழித் தெளிப்பிற்கு 25 கிலோ டிஏபி உரம் ஒரு எக்டேருக்கு ரூ.500 மானியத்தில்

வழங்கப்படுகிறது. தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகள் கொப்பரையை உலர வைக்க சூரியஒளி உலர்கலன் அமைக்க ரூ.5 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, மதுக்கூர், பேராவூரணி மற்றும் சேதுபாவாசத்திரம் வட்டார விவசாயிகள் பயன்பெறலாம்.

2013-14ம் ஆண்டு விவசாய மின் இணைப்பு இலக்கீடாக 336 வழங்கப்பட்டதில் இதுவரை 91 இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 245 இணைப்புகள் இவ்வாண்டு இலக்கீடாக வழங்க துரித நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதேநாளில் 3 ஆயிரத்து 864 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. நடப்பு காரீப் 2013-14ம் காரீப் பருவத்தில் இதுநாள் வரை 82 ஆயிரத்து 517 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதற்காக விவசாயிகளுக்கு ரூ.116.67 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது என்றார்.

விவசாயிகளின் மனுக்கள் ஆன்லைனில் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஒப்புகை சீட்டு வழங்கப்படும். இதேபோல் கண்டிப்பாக பதிலும் அவர்களுக்கு அனுப்பப்படும். தற்போது நெல் சாகுபடி சீசன் முடிந்துவிட்டது.

இனி வரப்போகிற சீசனுக்கு தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக ஒரு பதிவேடு பராமரிக்கப்பட உள்ளது. அதாவது விவசாயிகள் தங்கள் பகுதியில் எந்த வாய்க்கால், ஏரியை தூர்வார வேண்டும், தூர்வாராததால் என்ன பிரச்னை அல்லது அதற்கான கோரிக்கைகளை மட்டும் மனுவாக அளித்து பதிவு செய்து கொள்ளலாம் என்றார்.பயிர் காப்பீடு

ஒரு ஏக்கருக்கு ரூ.10.30 பைசா

அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட துணை தலைவர் ராயமுண்டாம்பட்டி ஜீவக்குமார் பேசும்போது, கடந்த ஆண்டு வழங்க வேண்டிய பயிர் காப்பீடு இந்த ஆண்டு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. செங்கிப்பட்டி பகுதியில் 130 விவசாயிகளுக்கு ரூ.39 ஆயிரத்து 884 வழங்கப்பட உள்ளது. ஆச்சாம்பட்டியைச் சேர்ந்த மாசி என்பவருக்கு சுமார் ஒரு ஏக்கர் பாதிப்பிற்கு ரூ.10.30 பைசா பயிர் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இதேபோல்

சுரக்குடிப்பட்டியைச் சேர்ந்த சொக்கலிங்கம் என்பவருக்கு ரூ.16 பயிர் காப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையை வைத்து ஒரு படி அரிசியை கூட வாங்க முடியாது. ஆனால் இந்திய பயிர் காப்பீடு நிறுவனம் விவசாயிகளுக்கு இழப்பீடு இந்த லட்சணத்தில் வழங்குவதை அனைவரும் அறிந்துக் கொள்ள வேண்டும் என்றார்.

**1,124 விவசாயிகளுக்கு பயிர்காப்பீட்டு தொகை**

**பாபநாசம்**, : கபிஸ்தலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் 2011- 12ம் ஆண்டுக் கான பயிர் காப்பீட்டுத் தொகை 544 விவசாயிகளுக்கு ரூ. 11 லட்சம் வழங்கப்பட்டது. சங்கத் தலைவர் ஜெகந்நாதன், இயக்குநர் எத்தியன், வங்கிச் செயலர் ரவி உள்பட பலர் கலந்து கொண்டனர். பாப நாசம் ஒன்றிய குழு தலைவர் கோபிநாதன் பயிர் காப்பீட்டுத் தொகையை வழங்கினார். இதேபோல் பாபநாசம் அடுத்த அரயபுரம் தொடக்க வேளாண் மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் பயிர்காப்பீட்டு தொகை 580 பேருக்கு ரூ.34 லட்சத்து 35 ஆயிரத்து 756 வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், தலைவர் காதர்ஒலி, ராஜகிரி ஊராட்சி தலை வர் ஷேக் தாவூது, முகமது காசிம், செயலர் ஜெயபால் உள்பட கலந்து கொண்டனர்.

**நிலக்கடலையில் கூடுதல் மகசூல்பெற நுண்ணூட்டச்சத்து கரைசல் அவசியம்**

**வேளாண் உதவி இயக்குனர் யோசனை**

**சேதுபாவாசத்திரம்**, : சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவிஇயக்குனர் பெரியசாமி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

நடப்பு பருவத்தில் சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் 1,500 ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்யப் பட்டுள்ளது. அவை தற் போது வளர்ச்சி பருவம், விழுது இறங்கும் பருவம், காய்பிடிக்கும் பருவம் என பல்வேறு நிலைகளில் உள்ளது. இத்தருணத்தில் நுண்ணூட்டச்சத்து கரை சல் தெளிப்பது மிகவும் அவசியம்.

நுண்ணூட்டச்சத்து கரைசல் தயாரிக்க ஒரு ஏக்கருக்கு தேவையான டி.ஏ.பி 1 கிலோ, அம்மோனியம் சல்பேட் 400 கிராம், பொட்டாஷ் 1 கிலோ,

பிளானோபிக்ஸ் 125 மில்லி ஆகியவற்றை எடுத்துக்கொள்ளவேண்டும். இவற்றில் டி.ஏ.பி உரத்தை (1 கிலோ) நன்கு தூள்செய்து 10 லிட்டர் தண்ணீரில் முதல் நாளே ஊறவைக்க வேண் டும். மறுநாள் தெளிந்த கரைசலை மட்டும் எடுத்துக் கொண்டு, அத்துடன் மேற்கண்ட பிற பொருட் களையும் (பிளானோபிக்ஸ் தவிர்த்து) கலந்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கலவையாக்கி ஒரு ஏக்கர் பரப்பில் மாலை வேளை யில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். பிளானோபிக்ஸ் பயிர்ஊக்கி மருந் தினை 200 லிட்டர் தண்ணீ ரில் கலந்து தனி யாக தெளிக்கவேண்டும். இம்மாதிரியான கரைசலை விதை த்த 25வது நாள் மற்றும் 40வது நாள் என இரண்டுமுறை தெளிக்க வேண் டும். மேலும் 45வது நாள் பூக்கும் தருணத்தில் களைக்கொத்தி மண் அணைக்கும் முன் ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். பிளானோபிக்ஸ் பயிர் ஊக்கி மருந்து தெளிப்பதால் பூக்கள் உதிர்வது தடுக்கப்பட்டு அத்தனை பூக்களும் விழுதுகளாக மாறுகிறது.
நுண்சத்துக்கரைசல் தெளிப்பு மற்றும் ஜிப்சம் இடுவதால் அனைத்து பேரூட்டம் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்களை பயிர்கள் நேரடி யாக எடுத்துக்கொண்டு உருவாகும் விழுதுகள் அனைத்தும் காய்களாக மாறி பொக்கற்ற திரட்சியான கடலைப்பருப்புகள் உருவாகிறது.
இதனால் ஒரு ஏக்கரில் 25 முதல் 30 சதம் வரை கூடுதலாக மகசூல் பெற லாம் என்று கூறியுள்ளார்.

### விதை கிராம திட்ட பயிற்சி

**பாபநாசம்**, : பாபநாசம் தாலுகா அய்யம்பேட்டை அடுத்த சரபோஜிராஜபுரம் ஊராட்சியில் நெல் விதை கிராமத் திட்ட பயிற்சி நடைபெற்றது. வேளாண் உதவி இயக்குநர் ஜேசன் நரேஷ் சுந்தரபாண்டியன் வரவேற்றார். பாபநாசம் ஒன்றிய குழுத் தலைவர் கோபிநாதன் தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் குணசேகரன் முன்னிலை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் மாநிலத் திட்டம் சீனிவாசன், அம்மாப்பேட்டை வேளாண் உதவி இயக்குநர் மனோகரன் ஆகியோர், விவசாயிகளுக்கு தரமான விதை உருவாக்குவது பற்றி பயிற்சியளித்தனர். வேளாண் அலுவலர் சான்று சுரேஷ் விதைகளின் தரம் மற்றும் நிலைகள், விதை கிராமத்தின் நோக்கம், அவசியம் பற்றி கூறினார். முன்னோடி விவசாயிகள், விதை

உற்பத்தியாளர்கள் பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர் பழனிசாமி செய்திருந்தார். வேளாண் அலுவலர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.

இன்றைய வேளாண் செய்திகள்

**அம்முண்டியில் உள்ள வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கலெக்டர் நந்தகோபால் திடீர் ஆய்வு**



**சிப்காட்,**

முதல்–அமைச்சரின் விவசாய திட்டமான நீடித்த கரும்பு சாகுபடி திட்டம், திருவலத்தை அடுத்த அம்முண்டியில் உள்ள வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தை பார்வையிடுவதற்காக, வேலூர் மாவட்ட கலெக்டர் நந்தகோபால் வந்தார். அவர்,

ஆலையில் திடீரென ஆய்வு செய்தார். ஆலை வளாகத்தில் அமைந்துள்ள நிழல் வலை பரு நாற்றாங்காலை பார்வையிட்டார்.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதிகளில் சுமார் 120 ஹெக்டர் பரப்பளவு கரும்பு சாகுபடியை இலக்காக கொண்டு நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக ஆலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 20 நிழல் வலை பரு நாற்றாங்காலை கலெக்டர் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

ஆலைக்கு வந்த மாவட்ட கலெக்டரை, ஆலையின் மேலாண் இயக்குனர் கார்த்திகா, கரும்பு பெருக்கு அலுவலர் ஆனந்தன் மற்றும் ஆலையின் அலுவலர்கள் வரவேற்று ஆலையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விவரித்தனர். அதை கேட்டறிந்த கலெக்டர் நந்தகோபால், திட்டம் செயல்படுத்தி கரும்பு பயிரிடப்படும் ஏரந்தாங்கல், அப்துல்லாபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள கரும்பு விவசாய நிலங்களை பார்வையிட்டார்.

கலெக்டருடன் வேளாண்மை இணை இயக்குனர் ஜெய்சுந்தர், ஆலையின் மேலாண்மை இயக்குனர் கார்த்திகா. கரும்பு பெருக்கு அலுவலர் ஆனந்தன் ஆகியோர் உடன் சென்றனர்.

**புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தண்ணீர் வருவாயை பெருக்கிக்கொள்ள வேண்டும் விவசாயிகளுக்கு கலெக்டர் வேண்டுகோள்**



**நாமக்கல்,**

நாமக்கல் மாவட்டத்தில், புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தண்ணீர் வருவாயை பெருக்கிக்கொள்ள வேண்டும் என விவசாயிகளுக்கு கலெக்டர் தட்சிணாமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விவசாயிகள் குறைதீர் கூட்டம்

நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.¢ இதில் 104 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை பெற்றுக்கொண்ட கலெக்டர் பேசியதாவது:-

நாமக்கல் மாவட்டத்தில் மழை அளவு ஆண்டு சராசரி 776 மி.மீ. 2013-ல் 552.3 மி.மீ. மழை பெய்துள்ளது. 29 சதவீதம் மழை அளவு குறைந்துள்ளது. இருக்கின்ற நீரை சிக்கனமாக பயன்படுத்த பைப்-லைன், தெளிப்புநீர் பாசனம், ரெயின்கன், நடமாடும் தெளிப்புநீர் கருவிகள், நுண்ணீர் பாசனம் போன்றவற்றின் மூலம் தண்ணீரின் பயன்பாட்டை அதிகமாக பயன்படுத்த விவசாயிகள் முன்வரவேண்டும்.

பண்ணை குட்டைகள்

நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 1,932 பண்ணைக் குட்டைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1,288 குட்டைகளுக்கு அனுமதி வழங்கி 380 பணிகள் முடிவடைந்து உள்ளது. 802 பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு உள்ள புதிய தொழில் நுட்பங்களான நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டம் துல்லிய பண்ணைத் திட்டம், தேசிய நுண்ணீர் பாசனம் போன்ற திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்தி தண்ணீர் வருவாயினை பெருக்கிக்கொள்ள வேண்டும்.

விவசாயிகளின் ஒருங்கிணைந்த கையேட்டினை அனைத்து விவசாயிகளுக்கு 31.3.2014-க்குள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. கால்நடை

பராமரிப்பு துறையின் மூலம் கால்நடைகளுக்கு உலர் தீவன மையங்கள் மூலம் தீவனம் வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் எலந்தகுட்டை பொன்காளியம்மன் மண்டபம் அருகில் உள்ள கட்டிடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டு விவசாயிகளிடம் இருந்து நேரடி நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அதுபோன்று நீர்வளம், நிலவள திட்டத்தின் கீழ் பிரசார வாகனம் மூலம் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.

மேலும் அவர் விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் குறித்த மனுக்களுக்கு ஒரு வாரத்திற்குள் பதில் அளிக்குமாறு துறை சார்ந்த அலுவலர்களை கேட்டுக்கொண்டார். இந்த கூட்டத்தில் இணை இயக்குநர் (வேளாண்மை) முரளிதரன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார், கூட்டுறவு இணைப்பதிவாளர் லட்சுமி, விவசாய சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**தர்மபுரி மாவட்டத்தில் உள்ள உரக்கடைகளில் ரசீது வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**

**தர்மபுரி,**

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள உரக்கடைகளில் உரங்கள் பூச்சிக்கொல்லிகள் வாங்குபவர்களுக்கு உரிய ரசீது வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினார்கள்.

<u>உரங்களுக்கு ரசீது</u>

தர்மபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் நடந்தது. இந்த கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசுகையில்,தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான உரக்கடைகளில் விவசாயிகள் வாங்கும் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு உரிய ரசீது தரப்படுவதில்லை.வாங்கும் உரங்கள் ரசீது வழங்காத செயல்பாடு வரிஏய்ப்ப்பிற்கு வாய்ப்பாகவும் அரசுக்கு வருமான இழப்பை ஏற்படுத்துவதாகவும் உள்ளது.

இந்த பிரச்சினைக்கு தீர்வு காண அனைத்து கடைகளிலும் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் வாங்குபவர்களுக்கு உரிய ரசீது வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். தர்மபுரி மாவட்டத்தில் பழங்காலத்தில் பயிரிட்ட சில அரிய வகை நெல் ரகங்கள் தற்போது அழியும் நிலையில் உள்ளன. அத்தகைய ரகங்களின் சாகுபடியை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். வறட்சியை தாங்கி குறைந்த அளவு தண்ணீரைகொண்டு வளரும் நெல் ரகங்கள், பிற உணவுப்பயிர் ரகங்களை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலியுறுத்தப்பட்டது.

<u>உரிமம் ரத்து</u>

கூட்டத்தில் கலெக்டர் விவேகானந்தன் பேசுகையில், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள உரக்கடைகளில் விவசாயிகள் வாங்கும் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு உரிய ரசீது வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ரசீது வழங்க மறுப்பவர்களின் உரிமம் ரத்து செய்யப்படும். இதுதொடர்பாக விவசாயிகள் 1077 என்ற இலவச தொலைபேசி எண்ணில் புகார்களை தெரிவிக்கலாம். தர்மபுரி மாவட்டத்தில் வறட்சியை தாக்கி வளரும் பழமையான நெல்ரகங்கள் கண்டறியப்பட்டு அவற்றின் சாகுபடியை மேற்கொள்ள வழிவகை செய்யப்படும் என்று தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில், காட்டுப்பன்றி மற்றும் யானைகளால் பயிர்சேதம் ஏற்பட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வனத்துறை சார்பில் நிவாரண உதவிகளை கலெக்டர் வழங்கினார். பாரம்பரிய நெல்ரகமான காட்டுயாணத்தை சாகுபடி செய்த முன்னாள் எம்.எல்.ஏ. மாதப்பன் அந்த நெல் விதைகளை விவசாயிகளுக்கு

இலவசமாக வழங்கினார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி ராமர் உள்பட அனைத்து துறை அதிகாரிகள் விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர்.

**வாய்க்கால்களில் தண்ணீர் திறப்பது குறித்து அரசுக்கு பரிந்துரை**



**ஈரோடு,**

கீழ்பவானி மற்றும் காலிங்கராயன் வாய்க்கால்களில் தண்ணீர் திறப்பது குறித்து அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் அதிகாரிகள் பதில் அளித்தனர்.

குறைதீர்க்கும் கூட்டம்

ஈரோடு மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமை நடந்து வருகிறது. அதன்படி நேற்று விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது. கூட்டத்துக்கு ஈரோடு மாவட்ட கலெக்டர் வி.கே.சண்முகம் தலைமை தாங்கினார். கூட்டத்தில் ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த பல்வேறு விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்.

விவசாயிகள் தரப்பில் கூறப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

ஈரோடு மாவட்டத்தில் வெள்ளை பொட்டாஷ் உரம் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. தட்டுப்பாட்டினை விரைவில் நீக்க வேண்டும். கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும். கரும்பு நிலுவைத்தொகையை வழங்க வேண்டும். கரும்பு ஆலைகள் வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த வேண்டும்.

பாசனத்துக்கு தண்ணீர்

ஈரோடு மாவட்டத்தில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளுக்கான இழப்பீட்டு தொகையை விரைந்து வழங்க வேண்டும். வறட்சி நிவாரணநிதியை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும். காலிங்கராயன் கால்வாய் பராமரிப்பு பணிக்காக தண்ணீர் நிறுத்தப்பட்டு உள்ளது. வாழை, நெல், கரும்பு, மஞ்சள் ஆகிய பயிர்களை காப்பாற்ற பிப்ரவரி 15-ந் தேதி முதல் மார்ச் 5-ந் தேதிவரை தண்ணீர் விட வேண்டும். கீழ்பவானி வாய்க்காலில் பிளாஸ்டிக் கழிவுகள் கொட்டப்படுவதை தடுக்க வேண்டும். ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

இவ்வாறு விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டது.

மேலும், கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் பி.காசியண்ணன் ஒரு மனு கொடுத்தார். அதில் கூறப்பட்டு இருந்ததாவது:-

குடிநீர் தட்டுப்பாடு

கீழ்பவானி பாசனத்தில் ஒற்றைப்படை மதகுகள், இரட்டைப்படை மதகுகள் என மண்டலங்கள் பிரிக்கப்பட்டு ஒரு மண்டலத்துக்கு தலா ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் வீதம் மொத்தம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. பவானிசாகர் அணையில் இருந்து 2 போகத்துக்கும் தண்ணீர் விட்டால்தான் முழுமையாக 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் ஒரு போக பாசனம் பெறும்.

இதில் ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் பாசனம் பெறும் ஒரு மண்டலத்துக்கு கடந்த 2011-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. பின்னர் கடந்த 2½ ஆண்டுகளாக பாசனத்துக்கு தண்ணீர் விடப்படவில்லை. இதனால் தென்னை மரங்கள் காய்ந்து விட்டன. ஆடு-மாடுகளுக்கும் தீவனமில்லாமல், கால்நடைகள் விற்கப்பட்டு வருகின்றன. நிலத்தடி நீர் குறைந்து விட்டதால் குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. எனவே குந்தா, பைக்காரா தொகுப்பு அணைகளில் இருந்து 8 டி.எம்.சி. தண்ணீர் எடுத்து எள் பயிருக்காக விட வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டு இருந்தது.

அரசுக்கு பரிந்துரை

இதே கோரிக்கையை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைத்தலைவர் எம்.துளசிமணியும் மனு கொடுத்தார். ஈரோடு மாவட்ட அனைத்து விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் தமிழக அரசு கரும்புக்கு அறிவித்து உள்ள பரிந்துரை விலையை ஆலை நிர்வாகங்கள் வழங்க வேண்டும் என்று மனு கொடுக்கப்பட்டது.

இந்த கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் சார்பில் அளிக்கப்பட்ட பதில் வருமாறு:-

கீழ்பவானி மற்றும் காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் திறப்பது குறித்தும், அணைகளில் தற்போது உள்ள தண்ணீர் நிலவரம் குறித்தும் அரசுக்கு எடுத்துரைத்து பரிந்துரை செய்யப்படும்.

ஈரோடு மாவட்டத்துக்கு தேவையான வெள்ளை பொட்டாஷ் 1,300 டன்னும், அம்மேனியம் சல்பேட் 300 டன்னும் இன்னும் ஒருவாரத்தில் கிடைக்கும். கரும்பு நிலுவைத்தொகை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்கண்டவாறு அதிகாரிகள் பதில் அளித்தனர்.

கூட்டத்தில் ஈரோடு மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, உதவி இயக்குனர் விஸ்வநாதன் உள்பட அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**யானைகளுக்கு குடற்புழுநோய் தாக்குதலை தடுக்க உப்புக்கட்டி**



**கோபிசெட்டிபாளையம்,**

யானைகளுக்கு குடற்புழுநோய் தாக்குதலை தடுக்க குண்டேரிப்பள்ளம் அணையில் வனத்துறையினர் உப்புக்கட்டிகளை வைத்தனர்.

தண்ணீர் பற்றாக்குறை

கோபிசெட்டிபாளையம் தாலுகா டி.என்.பாளையம் வனச்சரகத்தில் குன்றி, விளாங்கோம்பை, இஞ்சிக்கிடங்கு, மல்லியதுருவம் உள்ளிட்ட வனப்பகுதிகள் உள்ளன. இந்த வனப்பகுதியில் யானை, காட்டெருமை, மான், காட்டுப்பன்றி உள்ளிட்ட வனவிலங்குகள் உள்ளன. பருவமழை பொய்த்ததால் வனப்பகுதி வறண்டு காணப்படுகிறது. இதனால் வனப்பகுதியில் போதிய தீவனம், தண்ணீர் இல்லாமல் வனவிலங்குகள் அவதிப்பட்டு வருகின்றன.

டி.என்.பாளையம் வனச்சரகத்தில் குண்டேரிப்பள்ளம், பெரியப்பள்ளம், கல்ஊத்து ஆகிய பகுதிகளில் மட்டும் தண்ணீர் உள்ளது. மற்ற பகுதிகளில் வனவிலங்குகளுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது.

குடற்புழுநோய்

வறட்சியின் காரணமாக வனவிலங்குகள் தண்ணீரை தேடி குண்டேரிப்பள்ளம் அணைக்கு படைஎடுக்கின்றன. மாலை நேரங்களில் அணைக்கு யானைகள் கூட்டம் கூட்டமாக வந்து தண்ணீரை குடிக்கிறது. தினமும் இரவில் 50-க்கும் மேற்பட்ட யானைகள் அணைக்கு வந்து குளித்து கும்மாளமிட்டு செல்கின்றன.

குண்டேரிப்பள்ளம் அணையில் தண்ணீர் அதிகமாக உள்ளதால் யானைகள் தாகம்தீர தண்ணீரை குடித்துவிட்டு வனத்திற்குள் சென்றுவிடுகிறது.

கடந்த ஆண்டு வறட்சி காலங்களில் சில யானைகள் குடற்புழு நோய் தாக்கத்தினால் பரிதாபமாக உயிரிழந்தன. அதைத்தொடர்ந்து, வனவிலங்குகளுக்கு குடற்புழு நோய் தாக்குதலை கட்டுப்படுத்த வனத்துறையினர் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

உப்புக்கட்டிகள்

இந்தநிலையில் இந்த ஆண்டு வனவிலங்குகளுக்கு குடற்புழு நோய் தாக்குதலை தடுக்க வனத்துறையினர் முன்எச்சரிக்கை நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதன்படி குண்டேரிப்பள்ளம் அணையில் யானைகள் தண்ணீர் குடிக்கும் பகுதியில் வனத்துறையினர் உப்புக்கட்டிகளை வைத்தனர்.

உப்புக்கட்டியில் நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது. இதனால் யானைகள் உப்புக்கட்டிகளை சாப்பிடுவதால் நோய் தாக்குதல் தடுக்கப்படும்.

யானைகள் உப்புக்கட்டிகளை சாப்பிட்ட பின்னர் தண்ணீரை குடிக்கின்றன. இதேபோல் மான், காட்டெருமை ஆகிய வனவிலங்குகள் உப்புக்கட்டிகளை சாப்பிடுகின்றன.

குண்டேரிப்பள்ளம் அணை, பெரியப்பள்ளம் அணை, கல் ஊத்து, வனக்குட்டை ஆகிய நீர்நிலைகளில் வனத்துறையினர் உப்புக்கட்டிகளை வைத்து உள்ளனர்.

**இந்தியாவில் 12 லட்சம் எக்டேர் நிலத்திற்கு இயற்கைவழி வேளாண்மை சான்று கோவை வேளாண் பல்கலைக்கழக பதிவாளர் தகவல்**



**கோவை,**

இந்தியாவில் 12 லட்சம் எக்டேர் நிலத்திற்கு இயற்கைவழி வேளாண்மை சான்று பெற்றுள்ளது என்று கோவை வேளாண் பல்கலைக்கழக பதிவாளர் ரபீந்திரன் தெரிவித்தார்.

<u>பயிற்சி முகாம்</u>

கோவை வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில், ‘இயற்கைவழி(அங்ககம்) வேளாண்மை மற்றும் பயன்பாடுகள்’ குறித்த பயிற்சி முகாம் பல்கலைக்கழக உழவியல் துறையின் முற்போக்கு பயிற்சி மையத்தில் நடைபெற்றது. பதிவாளர்

ரபீந்திரன் தலைமை தாங்கி, பயிற்சி முகாமை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

விவசாயத்துறை நாள்தோறும் பல்வேறு சவால்களை சந்தித்து வருகிறது. நிலப்பரப்பு, நீர் ஆதாரங்கள் குறைந்து வருகின்றன. ரசாயன உரங்களை அதிகமாக பயன்படுத்துவதால், இயற்கை உரங்களின் உபயோகம் குறைந்து கொண்டே வருகிறது. முந்தைய காலத்தில் நம் நாட்டின் வேளாண் உற்பத்தி பொருட்களை நாம் பயன்படுத்தியது போக, மீதம் இருந்தவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தநிலையில் நாட்டின் வேளாண்மை உற்பத்தி குறைந்து கொண்டே வருகிறது.

<u>இயற்கைவழி வேளாண்மை</u>

நவீன வேளாண்மை முறைகளால் மண் அரிமானம், நீர் ஆதாரம் குறைதல், மண் உவர்ப்பு தன்மை அதிகமாதல், ரசாயன உரம், களை மற்றும் பூச்சிக்கொல்லி உபயோகத்தால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. இதனால் சமுதாயத்தின் பொருளாதார நிலை பாதிக்கப்படுகிறது. இவற்றை சமாளிக்க இயற்கைவழி வேளாண்மை முறைகளை பின்பற்றுவது அவசியம்.

இயற்கைவழி வேளாண்மையானது ஒருங்கிணைந்து வேளாண்மை தொழில்நுட்பத்தை கொண்டு, இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றவாறு இயற்கை ஆதாரங்கள், பயிர்கள் மற்றும் கால்நடைகளை கொண்டு வேளாண்மை செய்யப்படுகிறது. இயற்கைவழி வேளாண்மை முறையானது தற்போது 100–க்கும் மேற்பட்ட நாடுகளில் கடைப்பிடிக்கப்படுகிறது.

<u>அமெரிக்கா–ஆஸ்திரேலியா</u>

பயிர் மேலாண்மை முறைகளான பயிர் சுழற்சி, பசுந்தாள் உரமிடுதல், பயிர் கழிவுகள் மறுசுழற்சி, நீர் மேலாண்மை மற்றும் ஏற்ற பயிர் ரகங்கள் முதலியவற்றின் கட்டமைப்பு மற்றும் மேலாண்மை உத்திகளை கடைப்பிடிப்பதால்

மனிதன் மற்றும் கால்நடைகளுக்கு உறுதியான மற்றும் தரமான வேளாண்மை பொருட்கள் கிடைக்கிறது.

இயற்கைவழி வேளாண்மை பற்றிய தரம் மற்றும் பொருட்களின் நுகர்வோர் தேவை குறித்து, வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலிய நாடுகள் இயற்கைவழி வேளாண் பொருட்களின் ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

12 லட்சம் எக்டேர் நிலங்கள்

மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு மற்றும் அதிகரித்து வரும் இயற்கைவழி வேளாண்மை பொருட்களின் தேவை ஆகியவை விவசாயிகளிடம் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இதன்மூலம் இயற்கைவழி வேளாண்மை சான்று பெறுதல் அதிகரித்து வருகிறது. கடந்த 2009–ம் ஆண்டு மார்ச் மாதம் வரை இயற்கை வழி வேளாண்மைக்கு 12 லட்சம் எக்டேர் நிலங்கள் சான்று பெற்றுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

பயிற்சி முகாமில் பயிர் மேலாண்மை இயக்ககத்தின் இயக்குனர் கு.வேலாயுதம், உழவியல்துறை தலைவர் அசோக்ராஜா, பேராசிரியர் முகம்மது அமானுல்லா மற்றும் 20 வேளாண்மை விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர்.

**தஞ்சை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் இதுவரை 82 ஆயிரம் டன் நெல் கொள்முதல் கலெக்டர் சுப்பையன் தகவல்**



**தஞ்சாவூர்,**

தஞ்சை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் இதுவரை 82 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார்.

விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நேற்றுகாலை நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் சுப்பையன் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

தஞ்சை மாவட்டத்தில் 2013–14–ம் ஆண்டு சம்பா பருவத்தில் 1 லட்சத்து 6 ஆயிரத்து 77 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நேரடி நெல் விதைப்பின் மூலம் 2 ஆயிரத்து 682 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 56 ஆயிரத்து 750 எக்டேரில் சம்பா நெற்பயிர் அறுவடை செய்யப்பட்டுள்ளது. எக்டேருக்கு சராசரியாக 8 ஆயிரத்து 220 கிலோ நெல் மகசூல் கிடைத்துள்ளது. தாளடியில் 25 ஆயிரத்து 588 எக்டேரிலும், கோடை பருவத்தில் 2 ஆயிரத்து 270 எக்டேரிலும் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நடப்பு பருவத்திற்கான பயறுவகை சாகுபடி இலக்கு 78 ஆயிரத்து 900 எக்டேராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு தேவையான சான்றுபெற்ற ஆடுதுறை–3,

ஆடுதுறை–5 மற்றும் வம்பன்–3 ஆகிய ரக விதைகள் 152 மெட்ரிக் டன் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கரும்பு, தென்னை மற்றும் அனைத்து பயிர்களுக்கும் நுண்ணீர்ப்பாசனம் அமைத்திட தேசிய தோட்டக்கலை முகமை மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் 205 எக்டேரில் தீவிர கரும்பு சாகுபடி முறை செயல்படுத்த இலக்கு பெறப்பட்டுள்ளது.

உரம் இருப்பு

தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகள் கொப்பரை தேங்காயை உலர வைக்க ஏதுவாக சூரியஒளி உலர்கலன் அமைக்க ரூ.50 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, மதுக்கூர், பேராவூரணி மற்றும் சேதுபாவாசத்திரம் வட்டார விவசாயிகள் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெறலாம். தஞ்சை மாவட்டத்தின் தேவைக்காக யூரியா 5 ஆயிரத்து 84 டன்னும், டிஏபி 2 ஆயிரத்து 536 டன்னும், பொட்டாஷ் 4 ஆயிரத்து 486 டன்னும், காம்ப்ளக்ஸ் உரங்கள் 3 ஆயிரத்து 858 டன்னும் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தமிழகஅரசு திருந்திய நெல் சாகுபடி மூலம் அதிக விளைச்சல் பெறும் விவசாயிகளுக்கு ரூ.5 லட்சம் ரொக்கப்பரிசு வழங்கப்படும் என அறிவித்துள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் தங்கள் பெயரை வேளாண்மை விரிவாக்க மையங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும். வேளாண்மை பொறியியல்துறையின் நிலமேம்பாட்டு திட்டத்தின் கீழ் மண் தள்ளும் எந்திரம், உழுவை எந்திரம், கதிர் அடிக்கும் எந்திரம், மண் அள்ளும் எந்திரம் போன்ற கருவிகள் குறைந்த வாடகைக்கு விடப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் 19 கிராமங்களில் வேளாண்மை எந்திரங்களின் செயல்விளக்கம் நடைபெறுகிறது.

நெல் கொள்முதல்

தஞ்சை மாவட்டத்தில் ரூ.60 லட்சம் செலவில் 6 உலர் தீவன கிடங்குகள் அமைக்கப்பட்டு, தேவைப்படும் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போருக்கு கிலோ ரூ.2 விலையில் வைக்கோல் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பழுதான மின்மாற்றிகள் உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யப்பட்டு சீரான மின்வினியோகம் வழங்கப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் 363 நேரடி நெல் கொள்ளமுதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் நெல் வரத்துக்கு ஏற்ப நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கொள்முதல் நிலையங்களில் அரசு அறிவித்துள்ளபடி கிரேடு ஏ நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,415–ம், பொது ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,360–ம் கொள்முதல் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் நலன்கருதி அரசால் வரையறுக்கப்பட்ட ஈரப்பதம் 20 சதவீதம் வரை நெல்கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு இதேநாளில் 3 ஆயிரத்து 864 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. நடப்பு பருவத்தில் இதுவரை 82 ஆயிரத்து 517 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ரூ.116 கோடியே 67 லட்சம் நெல் கொள்முதல் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**“நவீன உத்திகளை கையாண்டால் விவசாயத்தை செழிக்க வைக்க முடியும்”**
**திருவாரூர் கலெக்டர் நடராசன் பேச்சு**



**கோட்டூர்,**

நவீன உத்திகளை கையாண்டால் விவசாயத்தை செழிக்க வைக்க முடியும் என்று திருவாரூர் கலெக்டர் நடராசன் கூறினார்.

சொட்டு நீர்ப்பாசனம்

திருவாரூர் மாவட்டம் கோட்டூர் அருகே உள்ள சேரி ஊராட்சி மேலகண்டமங்கலம் கிராமத்தில், முன்னோடி விவசாயி காவேரிரெங்கநாதன் தனது வயலில் சொட்டு நீர்ப்பாசனத்தில் நெல் சாகுபடி செய்து இருந்தார். டெல்டா மாவட்டத்தில் முதல் முறையாக சொட்டு நீர்ப்பாசன முறையில் சாகுபடி நடைபெற்ற இந்த வயலில் அறுவடை பணிகளை திருவாரூர் மாவட்ட கலெக்டர் நடராசன் தொடங்கி வைத்தார். அதைதொடர்ந்து விவசாயிகளுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் திருவாரூர் மாவட்ட கலெக்டர் நடராசன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

செழிக்க வைக்க முடியும்

விவசாயிகள் விவசாய பணிகளில் அறிவியல் சாதனங்களையும், நவீன உத்திகளையும் கையாண்டால் விவசாயத்தை செழிக்க வைக்க முடியும். இயல்பாகவே இயற்கை வளம் நிறைந்த திருவாரூர் மாவட்டத்தில் முள்ளியாறு தலைப்பில் தொடங்கி அரசலாறு வரை பல்வேறு ஆறுகள் ஓடுகின்றன. இந்த ஆறுகளில் நீர் செறிவூட்டல் திட்டத்தாலும், குளங்களில் மழைநீர் சேகரிக்க ஆழ்குழாய் கிணறு அமைத்ததாலும் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டில் குறைந்த அளவே மழை பெய்துஇருந்தாலும் நெல் மகசூல் அதிகரித்துள்ளது.

ஆராய்ச்சி

ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் டெல்டா மாவட்டங்களில் நெல் வயல்களில் சொட்டு நீர்ப்பாசன முறையில் சாகுபடி செய்வது பற்றிய

ஆராய்ச்சிகள் நடைபெற்று வரும் நிலையில் இந்த கிராமத்தில் ‘‘பி.பி.டி. 5204’’ என்ற ரக நெல்லை சொட்டு நீர்ப்பாசனம் முறையில் பயிரிட்டு வெற்றிகரமாக அறுவடை செய்து இருக்கிறோம். இத்திட்டத்தின் மூலம் உணவு உற்பத்தியை அதிகரிப்பதுடன் நீர், மின்சாரத்தை 60 சதவீதம் சேமிக்கலாம்.

கோடை காலங்களில் சொட்டு நீர்ப்பாசன முறையை பின்பற்றி 2 முறை நெல்லும் ஒரு முறை பயறு அல்லது காய்கறிகளையும் பயிர் செய்யலாம். இந்த முறையை சிறு, குறு விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டால் பொருளாதாரம் மேம்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வேளாண்மை துறை இயக்குனர் மயில்வாகணன், வேளாண்மை ஆராய்ச்சி மைய பேராசிரியர் காமராஜ், உதவி இயக்குனர்கள் சிவக்குமார். உத்திராபதி, இளஞ்செழியன், தாசில்தார் ரெங்கசாமி, ஊராட்சி மன்ற தலைவர் கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**குடுமியான்மலையில் உழவர் விவாதக்குழுவினருக்கு வானொலிப்பெட்டி– கையேடு அதிகாரிகள் வழங்கினர்**

**இலுப்பூர்,**

குடுமியான்மலையில் உழவர் விவாதக் குழுவினருக்கு வானொலிப்பெட்டி மற்றும் உழவர் நண்பன் நாட்குறிப்பு கையேட்டை வேளாண்மை அதிகாரிகள் வழங்கினர்.

<u>வானொலி – கையேடு</u>

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தில் உழவர் தின விழா மற்றும் உழவர் விவாதக்குழு அமைப் பாளர்களுக்கு வானொலிப் பெட்டியும், தொழில்நுட்பக் கருத்துக்களை உள்ளடக்கிய உழவர் நண்பன் நாட்குறிப்பும் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இவ்விழாவிற்கு ஸ்டாமின் பயிற்சி நிலைய இயக்குனர் மனோகரன் தலைமை தாங்கி பேசினார்.

புதுக்கோட்டை வேளா ண்மை இணை இயக்குனர் ஷாஜஹான் முன்னிலை வகித்து பேசினார். குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் சாந்தி, விழாவைத் தொடங்கி வைத்து பேசினார். வேளாண்மை அலுவலர் ராஜசேகரன் வர வேற்றுப் பேசினார்.

<u>தொழில்நுட்ப செய்திகள்</u>

இதில் உழவர் பயிற்சி நிலைய உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கு தினசரி அகில இந்திய வானொலி நிலையத்தில் ஒலி பரப்பாகும் வேளாண்மை குறித்த தொழில் நுட்பச் செய்திகளையும் நிகழ்ச்சி களையும் கேட்டறிந்து பயன் பெற வேண்டும் என்ற நோக்கத் தில் அனைத்து உறுப்பினர் களுக்கும் வானொலிப் பெட்டியும், வேளாண்மை மற்றும் அதனைச்சார்ந்த இதர துறைகளான தோட்டக்கலை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை, விதைச் சான்றுத் துறை, பட்டு வளர்ப்பு, மீன்வளம் போன்ற துறைகளின் தொழில்நுட்பங்கள் மற்றும் திட்டங்கள் உள்ளடக்கிய உழவர் நண்பன் நாட்குறிப்பு கையேடும் அட்மா – விரி வாக்கச் சீரமைப்புத் திட்டத்தின் நிதி உதவியோடு உழவர் பயிற்சி நிலையத்தின் மூலம் தயார் செய்யப்பட்டு அதிகாரிகளால் வழங்கப்பட்டது.

<u>அதிகாரிகள்</u>

விழாவில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் அண்ணாமலை சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார். விழாவில் வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் அறிவழகன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நாகேந்திரன், மத்திய அரசுத் திட்ட வேளாண்மை துணை இயக்குநர் சதானந்தம், நீர்வடிப் பகுதி திட்ட வேளா ண்மை துணை இயக்குநர் ஜெயக்குமார், திருச்சி அகில இந்திய வானொலி நிலைய நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சரவணன், விதைச்சான்று உதவி இயக்குனர் வைத்திய நாதன், வேளாண்மை அலுவலர் ஜெகதீஸ்வரி, வயலோகம் ஊராட்சி

மன்றத் தலைவர் ராஜேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முடிவில் வேளாண்மை அலுவலர் ஜெகதீஸ்வரி நன்றி கூறினார்.

**கறவை மாடுகளுக்கு தாது உப்புக்கலவையை வழங்கினால் பால் உற்பத்தி அதிகரிக்கும் அறிவியல் நிலைய தலைவர் தகவல்**

**புதுக்கோட்டை,**

கறவை மாடுகளுக்கு தாது உப்புக்கலவையை வழங்கினால் பால் உற் பத்தி அதிகரிக்கும் என்று வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் கூறி னார்.

<u>களப்பயிற்சி</u>

வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் கீழ.ராசியமங்கலம் கிராமத்தில் கறவை மாடுகள் வளர்ப்போருக்கு, தாது உப்பு கலவையை கறவை மாடு களுக்கு வழங்கி வந்தால் பால் உற்பத்தி மற்றும் பால் அடர்த்தி அதிகரிக்கும் என்பதை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த களப்பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சியை வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தலைவர் அசோகன் தொடங்கி வைத்து பேசினார்.

அவர் பேசுகையில், தமிழ்நாடு கால்நடை மருத் துவ பல்கலைக்கழகம் பல ஆராய்ச்சிகள் செய்து நான்கு வகையான தாது உப்பு கலவையை ஒவ்வொரு மாவட்டத்தின் கால்நடை களின் பற்றாக்குறையை பொருத்து வழங்கி வருகிறது. புதுகை மாவட்டத்திற்கு தாது உப்பு கலவை வகை 4 போது மானது, வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் சார்பாக முன்னிலை செயல் விளக்க திடல் பயனாளிகள் தாது உப்பை கடந்த இரண்டு மாதங் களாக உபயோகித்ததில், பால் அடர்த்தி 25 சதவீத டிகிரியில் இருந்து 27 சதவீதமாக உயர்ந் தது. பால் விலையில் லிட் டருக்கு ரூ.5 அதிகரித்தது. எனவே அனைவரும் அதை பயன்படுத்தி பால் உற்பத்தி யை அதிகரிக்கலாம், என் றார்.

<u>ஆரோக்கியமான கன்றுகள்</u>

பயிற்சியின் ஒருங் கிணைப்பாளரான உதவிப் பேராசிரியர் நூர்ஜஹான் பேசுகையில், தாது உப்பு கலவையை கறவை மாடு களுக்கு உணவு அல்லது நீர் ஆகாரத்துடன் கலந்து வழங்க வேண்டும். மேலும் கறவை மாடுகளுக்கு தாது உப்பு கலவை கொடுப்பதால் பால் அடர்த்தி கூடும். நல்ல ஆரோக்கியமான கன்றுகள் கிடைக்கும். சினைப்பருவ காலம் குறையும் மற்றும் தீவனச் செலவு குறையும், என் றார். இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு ஒரு கிலோ தாது உப்பு கலவை வழங்கப்பட்டது.

**அரியலூர், அதிக விலைக்கு விற்று தருவதாக மோசடி**

**அரியலூர்,**

அதிக விலைக்கு விற்று தருவதாக விவசாயியிடம் ரூ.1¾ லட்சம் மதிப் புள்ள முந்திரிகளை வாங்கி மோசடி செய்த இரு வியா பாரிகளை போலீசார் தேடி வருகிறார்கள்.

25 மூட்டைகள்

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் அருகே உள்ள ராங்கியம் கிராமத்தில் வசிப்பவர் ராஜாராம் (வயது 62). விவசாயியான இவர் தனது நிலத்தில் விளைந்த முந்திரிகளை பறித்து விற்பனை செய்வதற்காக 25 மூட்டைகள் சேர்த்து வைத்தி ருந்தார்.

அதிக விலை

அதே ஊரை சேர்ந்த நீல மேகம், குமணன் ஆகிய இரு வியாபாரிகளும் ராஜாராமி டம் வந்து நீங்கள் வைத்திருக்கும் முந்திரி கொட்டை மூட்டைகளை எங்களிடம் கொடுங்கள். அதிக விலைக்கு விற்று தருகி றோம் என்று கூறியுள்ளனர்.

25 மூட்டை முந்திரி கொட்டைகளை ராஜாராம் அவர்களிடம் கொடுத்தார்.

புகார்

நீண்ட நாட்களாகியும் முந்திரி கொட்டைகளை வாங்கி சென்ற நீலமேகம், குமணன் இருவரிடமும் பணம் கேட்டும் அவர்கள் கொடுக்கா ததால் அரியலூாில் உள்ள மாவட்ட குற்றப்பிரிவு போலீ சில் ராஜா££ம் புகார் செய்தார்.

இன்ஸ்பெக்டர் ஜெய மோகன் ரூ.1 லட்சத்து 70 ஆயிரம் மதிப்புள்ள முந்திரி கொட்டைகளை விற்று தருவதாக கூறி ஏமாற்றியதாக நீலமேகம், குமணன் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து அவர்களை தேடி வருகிறார்.

**வரத்து அதிகரிப்பு எதிரொலி: செண்டு மல்லி பூ விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை**



**திண்டுக்கல்,**

வரத்து அதிகரித்து இருப்பதால், செண்டு மல்லி பூக்களின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>பூக்கள் சாகுபடி</u>

திண்டுக்கல் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதியில் பூக்கள் சாகுபடி அதிக அளவில் நடந்து வருகிறது. இந்த பூக்களை பறிக்கும் விவசாயிகள், திண்டுக்கல் பூ மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

பனிக்காலம் என்பதால், சில வகையான பூக்களின் வரத்து குறைவாகவே இருக்கிறது. இதனால் விலை ஏறுமுகமாக உள்ளது. குறிப்பாக மல்லிகைப்பூ,

கனகாம்பரம் பூ வரத்து குறைந்து விட்டது. இந்த பூக்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.800–க்கும், கனகாம்பரம் ரூ.300–க்கும், சாதிப்பூ ரூ.500–க்கும், காக்கரட்டான் ரூ.200–க்கும், சம்மங்கி ரூ.150–க்கும் நேற்று விற்பனையானது.

இதேபோல் கோழிக்கொண்டை பூ ஒரு கிலோ ரூ.40–க்கும், ரோஜாப்பூ ரூ.60–க்கும், அரளி ரூ.30–க்கும், சிந்தாமணி பூ ரூ.25–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

செவ்வந்தி பூக்கள்

திண்டுக்கல் பூ மார்க்கெட்டுக்கு பல வண்ணங்களில் செவ்வந்தி பூக்கள் விற்பனைக்கு வருகின்றன. ஒவ்வொரு நிறத்திலான செவ்வந்தி பூக்களுக்கும் ஒரு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு நிறத்திலான செவ்வந்தி பூக்கள் விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. இந்த வகையான செவ்வந்தி பூ ஒரு கிலோ ரூ.70–க்கு விற்பனையானது. வெள்ளை செவ்வந்தி ரூ.50–க்கும், மஞ்சள் செவ்வந்தி ரூ.35–க்கும் விற்கப்பட்டது.

செண்டு மல்லி விலை வீழ்ச்சி

இதேபோல் செண்டு மல்லி பூக்களின் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. திண்டுக்கல் சுற்று வட்டார பகுதியில் இருந்து மட்டுமின்றி, சேலம் அருகே உள்ள ராயக்கோட்டை பகுதியில் இருந்தும் ஏராளமான செண்டுமல்லி பூக்கள் திண்டுக்கல் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வருகின்றன.

வெளியூர்களில் இருந்து நேற்று ஒரே நாளில் சுமார் 1½ டன் பூக்கள் திண்டுக்கல் வந்தன. இதனால் காலையில் இருந்தே செண்டு மல்லி பூக்களின் விலை வீழ்ச்சியுடன் காணப்பட்டது. ஒரு கிலோ செண்டு மல்லி ரூ.10 முதல் ரூ.20–க்குள்

விற்பனை செய்யப்பட்டன. போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தோட்டங்களில் இருந்து பூக்களை பறித்து மார்க்கெட்டுக்கு கொண்டு வருவதற்கு கூட கூலி கிடைப்பதில்லை என்று விவசாயிகள் புலம்பி தவிக்கின்றனர். இதனால் பூக்களை பறிக்காமல் செடியிலேயே விடக்கூடிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

**தேனி மாவட்டத்தில் தடுப்பூசி போட இலக்கு சிறப்பு முகாம் நாளை மறுநாள் தொடக்கம்**

தேனி மாவட்டத்தில் கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசி போடும் சிறப்பு முகாம்கள் நாளை மறுநாள் (திங்கட்கிழமை) தொடங்கி 16-ந்தேதி வரை நடைபெற உள்ளது. 1½ லட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போடப்பட உள்ளது.

கோழிக்கழிச்சல் நோய்

கோடை காலம் வந்து விட் டால் கோழிகளுக்கு கழிச்சல் நோய் ஏற்படுவது வழக்கம் ஆகும். வீடுகளில் வளர்க்கப் படும் கோழிகளுக்கும், பண்ணைகளில் வளர்க்கப் படும் கோழி களுக்கும் இந்த கோழிக்கழிச்சல் நோய் தாக்குதல் ஏற்பட்டு கோழி வளர்ப்பவர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும்.

இதனால் இந்த ஆண்டு கோடை காலத்திற்கு முன் கூட்டியே கோழிகளுக்கு தடுப்பூசி போட்டு முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது. அதன்படி தேனி மாவட்டத்தில் கால்நடைத்துறை சார்பில் கோழிக்கழிச்சல் நோய் தடுப் பூசி போட சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

1½ லட்சம் கோழிகள்

இந்த சிறப்பு முகாம் நாளை மறுநாள் (திங்கட்கிழமை) தொடங்கி வருகிற 16-ந்தேதி வரை 2 வார காலம் தேனி மாவட்டத்தின் அனைத்து கிராமங்களிலும் நடைபெற

உள்ளது. இந்த முகாமின் போது அனைத்து கிராமங் களிலும் சிறப்பு மருத்துவக்குழு அமைத்து தடுப்பூசி போடப் பட உள்ளது. தேனி மாவட்டத் தில் சுமார் 1½ லட்சம் கோழி களுக்கு தடுப்பூசி போடுவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப் பட்டு உள்ளது.

முட்டையில் இருந்து பொறிப்பட்டு 45 நாட்களை கடந்த அனைத்து கோழிகளுக் கும் தடுப்பூசி போட வேண்டி யது கட்டாயம் ஆகும். கிராமங்களில் சிறப்பு முகாம்களில் மக்கள் தாங்கள் வளர்க்கும் கோழி களை கொண்டு சென்று தடுப்பூசி போட்டுக் கொள்ள லாம். பண்ணைகளுக்கு மருத்துவக் குழுவினர் நேரில் சென்று தடுப்பூசி போடும் பணியில் ஈடுபட உள்ளனர். இந்த தகவலை மாவட்ட கலெக்டர் கே.எஸ். பழனிசாமி தெரி வித்துள்ளார்.

**நெல், கரும்பு சாகுபடியில் நவீன எந்திரம் பயன்பாடு குறித்து பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம்**




**சிவகங்கை,**

நெல், கரும்பு சாகுபடியில் நவீன எந்திரம் பயன்பாடு குறித்து பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம்.

பயிற்சி

சிவகங்கை வேளாண்மை பொறியியல் துறையின் உதவி செயற்பொறியாளர் மனோகர் ஹென்ற்றி சத்தியசீலன் விடுத் துள்ள அறிக்கையில் கூறியிருப் ப தாவது:-

சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த சிவகங்கை, காளையார் கோவில், திருப்புவனம், இளை யான்குடி, மானாமதுரை ஒன்றிய பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறைசார்பில் நெல் மற்றும் கரும்பு பயிர் சாகுபடியில் நவீன எந்திரங்கள் பயன்பாடு பற்றிய பயிற்சி ஒருவாரம் அளிக்கப்பட உள் ளது. 40 விவசாயிகளுக்கு முதல் கட்டமாக பயிற்சிஅளிக் கப் படும்

ஆதிதிராவிடர்களுக்கு முன்னுரிமை

இந்த பயிற்சியில் 18முதல் 40 வயதுக்குள்ள ஆண், பெண் விவசாயிகள் கலந்து கொள் ளலாம். பயிற்சியில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்படும். மேலும் ஆதிதிராவிடர் விவ சாயி களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் விவசாயிகள் வருகிற 5-ந்தேதிக்குள் சிவ கங்கை தொண்டி ரோட்டில் உள்ள வேளாண்மை பொறியி யல் துறை அலுவலகத்தில் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு அவர்அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## திருப்பூர்: தண்ணீரின்றி கருகும் நெற்பயிர்கள்: தவிப்பில் தாராபுரம் விவசாயிகள்



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் பகுதியில் அறுவடைக்குத் தயாராக உள்ள நெற் பயிர்களுக்கு கொள்முதல் நிலையம் இல்லாமல் தவிக்கும் நிலையில், தாராபுரத்தில் நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகத் தொடங்கியிருப்பது விவசாயிகளையும், விவசாயத்தை நம்பியுள்ள 15 ஆயிரம் குடும்பங்களையும் பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

**அமராவதி பாசனம்**

அமராவதி பாசன சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் கே.விஸ்வநாதன் கூறியது: அமராவதி பாசனத்தில் 52 ஆயிரத்து 560 ஏக்கர் உள்ளது. பழைய ஆயக்கட்டு பாசனத்தில் 27 ஆயிரம் ஏக்கர் உள்ளது. உடுமலைப்பேட்டை தொடங்கி கரூர் மாவட்ட மாயனூர் வரை 192 கி.மீ., பாசனத்திற்கு அமராவதி தண்ணீர் செல்கிறது. தற்போது, அப்பகுதியில் 15 ஆயிரம் ஏக்கருக்கு தண்ணீர் இல்லை. குடிநீர் மட்டும் தான் கிடைக்கிறது.

உடுமலை வட்டம் கணியூர் காரத்தொழுவு மடத்துகுளம் பகுதியில் ஒருபோக சாகுபடி எடுத்து முடிக்கப்பட்டுள்ளது. புதிய ஆயக்கட்டுப் பகுதியில் மானாவாரி பயிர்களான பீட்ரூட், சூரியகாந்தி, மக்காச்சோளம் போன்றவை பயிரிடப்பட்டுள்ளன.

### 2500 ஏக்கர்

தாராபுரம் வட்டத்தில் அலங்கியம் தடுப்பணை பாசனம், தளவாய்பட்டினம் தடுப்பணை பாசனம், தாராபுரம் ராஜவாய்க்கால் பாசனம், கொளிஞ்சிவாடி ராஜவாய்க்கால் பாசனம்,வீராச்சிமங்கலம், கொளத்துப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் கிணற்றுப் பாசனம் இல்லாத 2500 ஏக்கரில் நெற்பயிர்கள் கருகும் அபாயத்தில் உள்ளன.

இதனால் விவசாயிகள் மிகப்பெரிய நஷ்டத்தை சந்திக்க உள்ளனர். தாராபுரம் சீத்தக்காடு பாசன தடுப்பணை பகுதியிலும், ராஜவாய்க்கால் பகுதியிலும் பயிர்கள் கருகத் தொடங்கிவிட்டன.

அமராவதி அணையில் 6 அடி தண்ணீர் தான் உள்ளது. அந்த தண்ணீர் நிச்சயம் தாராபுரம் பகுதிக்கு வந்துசேராது. பயிர்களின் உயிரை காக்க வேண்டிய நிலையை கடந்து, பயிரிட்ட விவசாயிகளின் வாழ்வதாரத்தை காக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராம நிர்வாக அலுவலர்களை அனுப்பி மானியம் கொடுப்பதற்கான நடவடிக்கையை ஆட்சியர் மேற்கொள்ள வேண்டும். ஒரு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் முதலீடு செய்துள்ளோம். 3 ஆயிரம் விவசாயிகள் நெற்பயிரை நம்பி விதைத்து, கடைசிக்கட்ட தண்ணீரின்றி நஷ்மடைந்துள்ளோம்.

### அறிகுறி இல்லை

இதில், 10 ஆயிரத்திற்கும் அதிகமான விவசாயத் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். இந்த விவசாயிகள் அனைவருக்கும், உடனடியாக ஒரு

ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் மற்றும் விவசாயக் குடும்பங்களுக்கு ஓர் ஆண்டிற்கான அரிசி வழங்கி குடும்பத்தை காப்பாற்ற வேண்டும்.

15 ஆயிரம் விவசாயக் குடும்பங்களின் வாழ்வதாரத்தை காப்பாற்றக் கோரி தாராபுரம் கோட்டாட்சியரிடம் தண்ணீர் திறக்க மனு அளித்தோம். பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் அலுவலகத்திலும் மனு அளித்தோம். ஆனால், அமராவதி தண்ணீர் தாராபுரம் பகுதிக்கு எட்டுவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. எனவே, கிராமநிர்வாக அலுவலர்கள் மூலமாக உடனடியாக கணக் கெடுப்பு செய்து விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையை உடனடி யாக வழங்க வேண்டும் என்றார் விஸ்வநாதன்.

கடந்தாண்டும் இப்பகுதியில் விவசாயம் பொய்த்துப்போன நிலையில், இந்தாண்டு நெற்பயிருக்கு இறுதிக்கட்ட தண்ணீரின்றி கருகிய பயிர்களைக் கண்டு மனம்நொந்து போயுள்ளன விவசாயக்குடும்பங்கள்.